பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 237 ஆடி 08 ஆம் நாள் புதன்கிழமை 24 ஜூலை 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
Dip/HND in Business Management
Leading to BBA Hons
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# வேட்பாளர் விவகாரத்தால் ஐ.தே.கவுக்குள் முரண்பாடு

## அனைத்துத் தகுதியும் தனக்கு உள்ளது என்று சஜித் சீற்றம்

கொழும்பு, ஜூலை 24

ஐக்கிய தேசியக் கட்சியின் உயிர்நாடியாக இருக்கும் எனக்கு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க சகல தகுதியும் உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டுள்ளார் எனவும், எனினும் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட அவருக்குத் தகுதி இல்லை எனக் கட்சியிலுள்ள சிலர் எதிர்ப்புக் காட்டியுள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகி இருந்தன. இது தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

21



## கறுப்பு ஜூலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கறுப்பு ஜூலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பல்கலைக்

21

## 30 பவுண் நகைகள், பணம் மானிப்பாயில் கொள்ளை

மானிப்பாய், ஜூலை 24

வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுடைய வீட்டில் பணம், நகைகளை கொள்ளைய

04

## தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு இருவாரத்துள் அமைச்சரவை பத்திரம்

### அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

### தேவதாசனின் போராட்டத்தையும் முடித்து வைப்பு

கொழும்பு, ஜூலை 24

தமிழ் அரசியல் கைதி கனகசபை தேவதாசனின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முடித்து வைக்கப்பட்டுள்ளது என்றும், தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பான அமைச்சர

02

## அமைச்சரவைப் பத்திரம் மட்டும் போதுமானதல்ல

### சட்டத்தரணி தவராசா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

அரசியல் கைதிகளை விடுவிக்க அமைச்சரவை பத்திரம் மட்டும் சமர்ப்பித்தல் போதுமானது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை என அரச தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மனோ கணேசன்

21

## மானிப்பாய் சூட்டு சம்பவம் கைதான மூவருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மானிப்பாயில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞனுடன் தாக்குதல் நடத்த வந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூவரையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மானிப்பாய் இணுவில் வீதியில் 3

21

## அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக செயற்படுவோம்

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 24

எமது இளைஞர்களைப் பலியெடுக்கும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே நாம் நாடாளுமன்றில் செயற்படுவோம் என்று தமிழ்த் தேசி

21

## யாழில் ஆவாக் குழுவை கூண்டோடு ஒழிப்போம்!

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆவாக் குழுவினரின் அடாவடிகள் இன்னமும் அடங்கவில்லை. அவர்களைக் கூண்டோடு இல்லாதொழிப்

21

## 'ஈஸ்ரர்' தினத் தாக்குதலுக்கு மைத்திரிபாலவும் பொறுப்பு

### எதிர்கட்சி குற்றஞ்சாட்டுகின்றது

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் நடத்தப்பட்ட பயங்காரவாதத் தாக்குதலுக்கு அரச தலைவரும், தலைமை

04



தமிழர் பாரம்பரியப்படி இரு கரம் கூப்பி ஆளுநருக்கு வரவேற்பு

## தமிழ் தேசம் வாழ்வதற்கு தமிழ் வாழ்வது அவசியம்

### வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 24

தமிழ் தேசம் வாழவேண்டும் என்றால் தமிழ் மொழி வாழ வேண்டும். நாங்கள் மொழி அடையாளம் கொண்டவர்கள்.

21

## அமெரிக்க தூதுவர் மகிந்தவுடன் பேச்சு

கொழும்பு, ஜூலை 24

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் உடன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடந்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோரும்

04





## பொதுக்கூட்டம்

**காரைநகர் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்**

**இடம் :** காரைநகர் அபிவிருத்திச் சபை நூலகம், பிரதான வீதி, புதுறோட் சந்தி, காரைநகர்.
காலம் : 11.08.2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 9.30 மணி
தலைமை : திரு.நா.பாலகிருஸ்ணன்

**குறிப்பு :**

1. அங்கத்தவர்கள் மட்டும் மேற்படி கூட்டத்தில் பங்கு பற்றலாம்.
2. பிரேரணைகள் இருப்பின் 01.08.2019 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.
3. அலுவலகத்தில் எழுத்து மூலம் கிடைக்கப் பெற்ற குறிப்பிட்ட பிரேரணைகள் மாத்திரமே பொதுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**க.நாகராசா**
**செயலாளர்.**


## தமிழ் அரசியல்...

வைப் பத்திரம் ஒன்றை, இன்னும் இரு வாரங்களுக்குள், அமைச்சரவையில் நான் சமர்ப்பிக்கவுள்ளேன் என்று தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு, மகஸின் சிறைச்சாலையில் ஆயுள் தண்டனையை அனுபவித்துவரும் தமிழ் அரசியல் கைதியான கனகசபை தேவதாசன் கடந்த 15ஆம் திகதி முதல் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். தன்னைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும், அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர் நீர் கூட அருந்தாமல் கடந்த 8 நாள்களாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வந்தார். மகஸின் சிறையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கனகசபை தேவதாசன் இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவின் முன்னாள் பணிப்பாளராவார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையக் குண்டு வெடிப்பில் தொடர்புள்ளது என்று சந்தேகிக்கப்பட்டு 2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பில் கைதுசெய்யப்பட்ட தேவதாசனுக்கு 2017ஆம் ஆண்டு கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது. தனக்காக வாதாட சட்டத்தரணிகள் எவரையும் தேவதாசன் அப்போது அனுமதித்திருக்கவில்லை. மாறாக தேவதாசனே தனக்காக நீதிமன்றத்தில் வாதாடியிருந்தார்.

62 வயதுடைய தேவதாசன், தனக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனைக்கு எதிராக கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கு வசதியளிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

மேன்முறையீடு செய்வதற்குக் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்டத்தரணியின்றி மனு ஒன்றைத் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரி நீதி அமைச்சுக்குத் தேவதாசன் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார். ஆனால் உரிய பதில் கிடைக்கவில்லை. இதனிடையே உணவு தவிர்ப்பில் ஈடுபட வேண்டாம் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தேவதாசனை அச்சுறுத்தினர் எனவும் கூறப்படுகின்றது. ஆனாலும் தேவதாசன் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார்.

இந்தநிலையில், அமைச்சர் மனோ கணேசன் நேற்றுப் பகல் மகஸின் சிறைச்சாலை சென்று, தேவதாசனின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்ததாவது

எனது இந்த உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டு, நான் தந்த ஒரு கிண்ணம் நீரை அருந்தி, தேவதாசன் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு, மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்பட சம்மதித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை, இன்னும் இரு வாரங்களுக்குள், அமைச்சரவையில் நான் சமர்ப்பிக்கவுள்ளேன். வரலாற்றில் முதன் முறையாக, சமர்ப்பிக்கப்பட்வுள்ள, இத்தகைய ஓர் அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவை ஏற்றுக்கொள்ளச் செய்ய அனைத்தையும் நான் செய்வேன்.

இதற்குத் தேவையான அரசியல் சூழல் நாட்டிலும், அரசுக்கு உள்ளேயும், வெளியேயும் ஏற்படும் விதத்தில் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் இந்தச் சந்தர்ப்பத்தில் வேண்டுகின்றேன். என்றார்.

அமைச்சர் மனோ கணேசனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், கவீந்திரன் கோடீஸ்வரன் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா ஆகியோரும் நேற்று மகஸின் சிறைச்சாலை சென்றிருந்தனர். (எ-22)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**சத்தியசீலன் லதர்சன்**
(B.B.A. (FM Spl)
யாழ்.பல்கலைக்கழகம் கணக்குப் பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
உபதலைவர்
பெரியதம்பிரான் கோயில் ஏழாலை)

தோற்றம் 10.12.1989
மறைவு 24.06.2019

ஏழுதலம் சூழ்ந்த ஏற்றமிகு இம்மண்ணில்
ஏழாலை எனும் ஊரில் பிறந்தவன்
ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்தில் நீ
எண்ணுகரில்லா உப தலைவனாய் திகழ்ந்தாய்
ஆண்டவன் பாதம் நீயடைந்தாய் ஆயினும் எம் மனதில் நீ வாழ்வாய்.

செம்பியன் லேன், கொக்குவில்.
பெரியதம்பிரான் பரிபாலனசபை, ஏழாலை.

## பகிரங்க ஏலவிற்பனை

**மாந்தை மேற்கு ப.நோ.கூ.சங்கம், திருக்கேதீஸ்வரம்**

**01. PASOAN PRO MOTOR CYCLE NP VG 7948**
- ஆரம்ப பெறுமதி - 25000.00
- உற்பத்தி - Hero Honda
- நாடு - இந்தியா

**02. வாகனத்தில் கழற்றப்பட்ட ரயர்கள் - 16**
- இனம் - 1000 20
- ஆரம்ப பெறுமதி - 2500.00

**03. பழைய இரும்புகள்** - 100Kg
- ஆரம்பபெறுமதி கிலோ - 80.00
- **பகிரங்க ஏலவிற்பனை திகதி 10.08.2019 முற்பகல் 10.00 மணி**
- **உள்நுழைவுக்கட்டணம் - 1000.00**
- **கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது**

தொடர்புகளுக்கு: **தலைவர்,**
**மாந். மேற்கு ப.நோ.கூ.சங்கம்,**
**திருக்கேதீஸ்வரம்.**
**023 205 0815**

## எங்கள் குடும்பத் திருத்தந்தையின் 18ஆம் ஆண்டு நினைவுத்திருவஞ்சலி



**அமரர் உயர்திரு.**
**பொ.சங்கரப்பிள்ளை**

(முன்னாள் அதிபர் - யா/ உடுத்துறை ம.வி.அதிபர் தரம் I
அகில இலங்கை சமாதான நீதவான்)

திதி : அபரபக்க ஸப்தமி 24.07.2019

உதயம் 01.07.1938
அஸ்தமனம் 11.08.2001



எங்கள் குடும்ப பாசறையின்
தானைத் தளபதியே .....!
திருமறையாய் வாழ்ந்த எங்கள் தேவனே .....!
அப்பழுக்கற்ற எங்கள் அற்புதனே .....!
புன்னகையால் அரசாண்ட - மன்னவரே .....!
எங்கள் செல்லக் கனியான உங்கள் மகனை
- இழந்த துயர் நெஞ்சடைக்க
உங்கள் சந்நிதானத்தில் நிற்கின்றோம்
தந்தையே ..........!
ஆறுதலும், தேறுதலும் தந்து அணைத்திடுக .....!
விம்மும் நெஞ்சுடன்
உங்கள் திருமார்பில் சாய்கின்றோம் .....!
உங்கள் ஆசீர்வாதத் திரு ஒளியால்
அமைதி தந்திடுக ..........!

உடுத்துறை தெற்கு,
தாளையடி,
வடமராட்சி கிழக்கு.
**077 808 4475**

உங்கள் நினைவுகளுடன்
அன்பு மனைவி, பாசத்திற்குரிய மகன்,
ஆசைமகள், மருமகள்மார், மருமகன்,
பேரப்பிள்ளைகள், குடும்ப உறவுகள்.

**வீடு விற்பனைக்குண்டு**

கோண்டாவில் உப்புமடம்
சந்திக்கு அருகாமையில்
2பரப்புடன் கூடிய
வீடு விற்பனைக்குண்டு.

(CS 26875)(04.17)

தொடர்பு: **077 563 3401**

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் உள்ள **Lovely Flowers Center** இற்கு
அனுபவமுள்ள பெண் பணியாளர்கள் உடன் தேவை.

Receptionists / வரவேற்பாளர்

* கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்
* வயதெல்லை - (18 - 30)

**077 400 5023, 021 221 4235**

**ES Printers**

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

உங்கள் பணத்தை போலவே நேரத்தையும் சேமிக்க, எம்முடைய சில சேவைகளுக்காக
சம்பத் வங்கி சேவை நிலைய எண்ணிக்கையை
**இரட்டிப்பாக்கியுள்ளோம்!**

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

சம்பத் வங்கி அறிமுகப்படுத்தும் முகவர் வங்கியியல் சேவை

**சம்பத் MY BANK**

SAMPATH MY BANK

நாடுமுழுவதிலும் தற்போது 150 புதிய முகவர் சேவை வலையமைப்புகள் உங்களுக்காக உங்கள் அருகில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.




நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 30 30 50 www.sampath.lk/mybankagent/

BAJAJ MOTORCYCLES

**சில்லு இரண்டுக்கும் டபள் வாசி**




ரூபா. 26,000/- வரை விலைக்கழிவு

குறைந்தபட்ச முற்கொடுப்பனவு ரூபா. 49,000/- இலிருந்து

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட்

0114 700 600 | info@dpmco.com | www.dpmco.com

அழையுங்கள் 0114 700 600

## 'ஈஸ்ரர்'...

அமைச்சரும், அமைச்சரவையுமே முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பின ரான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் நிர்வாக மாவட்டச் சட்டத்தின் கீழான தீர்மானங்கள் மீதான விவாவதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தாக்குதல் குற்றவாளிகளைக் கண்டறிவதை விடுத்து அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக அரசு ஆராய்ந்து வருகின்றது. அரசு ஆராய்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாம் எமது பொது வேட்பாளரைக் களமிறக்கி ஆட்சியைக் கைப்பற்றிக் காட்டுவோம்.

இலங்கையில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல் சொல்லிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலாகும். தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று கூறிக் கால அவகாசம் கொடுத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதைத் தடுக்க முடியாத அரசே ஆட்சியில் உள்ளது.

இந்தத் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் தலைமை அமைச்சரும், அமைச்சரவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அமைச்சரவைத் தலைவரான அரச தலைவரும் குற்றவாளி என்பதே எமது நிலைப்பாடு. என்றார். (எ)

## 30 பவுண்...

டித்துச் சென்ற சம்பவம் மானிப்பாயில் நேற்று இரவு நடந்துள்ளது.

சண்டிலிப்பாய், டச்சு வீதியில் உள்ள வீடொன்றிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 30 பவுண் நகைகள், 600 யூரோ, மற்றும், 50 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் தங்களது உறவினர்களுடைய வீட்டில் தங்கியிருந்துள்ளனர். நேற்று இரவு அனைவரும் நித்திரையாகியபோது திருட்டு நடந்துள்ளது என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. வீட்டின் ஜன்னல் கம்பியை வளைத்து அதனூடாக கொள்ளையர்கள் வீட்டினுள் இறங்கியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகள் இடம்பெறுகின்ற என்றும் மானிப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். (எ21.26)

## அமெரிக்க...


கலந்து கொண்டனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள், தற்போதைய அரசியல் பின்னணி மற்றும் இரு நாடுகளுக்கிடையில் ஏற்கனவே இருக்கும் உறவுகளை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்று எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். (எ)

### மரண அறிவித்தல்

## செல்வத்துரை வைரமுத்து

(முன்னாள் உரிமையாளர்- திருப்பதி ஹாட்வெயர்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை - வைரமுத்து நேற்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - திருப்பதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வத்துரை (விதானையார்- 3ஆம் வாய்க்கால், பன்னங்கண்டி, பரந்தன்) சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிஜிகாந் மற்றும் ரவீந்திரநாத் (பொறியியலாளர்- லண்டன்) மிராளன் (Director of Product Management, Ceymplon Private Limited) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (லண்டன்), பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சனா (கணக்காளர் - லண்டன்), காயத்திரி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாலினி (லண்டன்), புனிதராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அஸ்வினி (லண்டன்), விதுஷன் (லண்டன்), நித்திஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் வித்தியா (லண்டன்), யாழினி (லண்டன்), விஜிதா (லண்டன்), றஜிவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

138/1, பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன் வை.மிராளன்
077 244 4162, 021 221 7457

## 19 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அம்பலவாணர் குலசேகரம் (J.P)**


(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

என்றும் உங்கள் நினைவுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள்.
கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

தோற்றம் 26.08.1937
மறைவு 24.07.2000

### மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி சிவகுரு

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவகுரு அவர்கள் 23.07.2019 செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்றவர்களான சீனியன் சீதேவி தம்பதிகளின்பாசமிகுமருமகனும்சிவகுருபரமேஸ்வரியின்பாசமிகுகணவரும் கங்காதரன், புஸ்பகுமாரி, மதனகுமாரி , முரளிதரன்(பிரான்ஸ்), யசோதரன்(பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீதரன், இந்திரகுமாரி, இளங்கோதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவரான சரஸ்வதி , இலட்சுமி, சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அனுலேஸ்வரி, அன்பழகன் , பிரதீபா(பிரான்ஸ்), ஜென்சி(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தரூபன், ஜெசிந்தன், ரூபதரன், நாகரூபிகா, சிவரூபன், தேனுஜன், நிதுஜன், ரிதுஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 24.07.2019 காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கூவில்,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

தொடர்புகளுக்கு
021 226 2949
077 830 0760

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

### மரண அறிவித்தல்

## திருமதி கருணைநாயகி முத்துராசா



சரவணையை பிறப்பிடமாகவும் நாரந்தனை மற்றும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட கருணைநாயகி முத்துராசா கடந்த (22.07.2019) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கனகம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான நடராசா தெய்வானைப்பிள்ளையின் மருமகளும் காலஞ்சென்ற முத்துராசாவின் பாசமிகு மனைவியும் நிர்மலா, பிறேமளா, குகதாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தராசா (மைக்றோ), காலஞ்சென்ற வில்வராசா, சுதர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, செல்வநாயகி மற்றும் தவநாயகி காலஞ்சென்றவர்களான கதிர்காமநாதன் , நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பூமணி, சிந்தாமணி, வடிவேலு மற்றும் ருக்குமணி, தாரணதேவி காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, சிவசுப்பிரமணியம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் தனுஷா (லண்டன்), கோபிகா (கனடா), யானுகா, யனூஷன், ருசாந், கவிதா, பிரசாத், சுகன்யா (சுவிஸ்), லாவன்யா (சுவிஸ்), அஜித் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் திபிஷன் (லண்டன்), புவிசிகன் (லண்டன்), வர்மிசா (கனடா), கபிஷிகா (கனடா), யாதோஷ், சோபிலக் ஷன், ஜோன்சன், மிசோலா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்நாளை(25.07.2019)வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

78, பத்திரகாளி கோவிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 610 2945

# பருத்தித்துறை நகரசபை
## அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆந் திகதி தொடக்கம் எமது நகரசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும். வடக்கு மாகாண பிரதம செயலாளர் அவர்களின் NP/01/02/03/01/14 ஆம் இலக்க 03.08.2018 ஆந் திகதிய, NP/01/02/03/01/14/Poi ped UC ஆம் இலக்க 22.06.2019 ஆந் திகதிய கடிதங்களுக் கமைவாகவும் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடைய வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவிப்பெயர் | வெற்றிடம் | சம்பள அளவுத்திட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | மின்பணியாளர் தரம் III | 01 | PL2-2016 (அ.நி.சு 03/2016) 25250-10x270-10x300-10x330-12x350-38450 |
| 2. | சுகாதாரத்தொழிலாளி தரம் III | 09 | PL1-2016 (அ.நி.சு 03/2016) 24250-10x250-10x270-10x300-12x330-36410 |
| 3. | வேலை/வெளிக்கள தொழிலாளர் தரம் III | 03 | PL1-2016 (அ.நி.சு 03/2016) 24250-10x250-10x270-10x300-12x330-36410 |

**பொதுவான அடிப்படைத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும். சிறந்த தேகஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு எதிராக புரிந்த குற்றவியல் தவறொன்றின் காரணமாக சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பு வழுங்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பதாரி பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் ஆகக் குறைந்தது 05 வருடங்கள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்)

**குறிப்பு:-** பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினை கொண்டவர்க-ளிடமிருந்து பொருத்தமான. போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்-திலேயே பருத்தித்துறை நகரசபை எல்லைக்கு வெளியே வசிப்போரது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

**சேவை நியந்தனைகள்**

1. இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2. ஊழியர் விதவைகள் / தபுதாரர்கள். அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**கல்வித்தகைமைகள்**

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு :

சுகாதாரத்தொழிலாளி. வேலை/வெளிக்கள தொழிலாளர் பதவிக்கு ஆகக்குறைந்தது தரம் 8 சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும் ஆயினும் மேற்கூறிய கல்வித்தகைமை உடையோரிடம் இருந்து பொருத்தமான. போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்திலேயே இவ்விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

**தொழில்சார் தகைமைகள்**

**மின்பணியாளர் :**

விண்ணப்பதாரி மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இத்துறைசார்ந்த தேசிய தொழிற்பயிற்சி தகைமை மட்டம் 02 (NVQ Level 2) இற்கு குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை :**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குழுவினால் வழங்கப்படும் நேர்முகப்பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

1. பருத்தித்துறை நகரசபையில் ரூபா 100 /- Vat (15%) NBT (2%) இனை செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று உரியமுறையில் பூரணப்படுத்தி தகைமைச் சான்றிதழ் களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு "செயலாளர். பருத்தித்துறை நகரசபை. கல்லூரி வீதி. பருத்தித்துறை" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. அஞ்சல் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப்பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
4. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான தகைமைகள் அனைத்தும் விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ. பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
5. கீழ்க்காணும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கும் பட்சத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.
    1. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
    2. கல்வித்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
    3. தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
    4. அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
6. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானவை என ஒருவர் தேர்ந் தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்பட்டால். அவர் தகுதியற்றவர் எனக்குறிப்பிடப்படுவதற்கும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாகுவார்.

**விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை தமது பிரிவுக்கான கிராமசேவகர் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2019.08.14 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் காலதாமதமாகும் மற்றும் உரிய முறையில் பூரணப்படுத்தப்படாதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும். மாற்றியமைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அனைத்து அதிகாரங்களும் பருத்தித்துறை நகரசபையின் செயலாளருக்கே உண்டு.

**செயலாளர்**
**பருத்தித்துறை நகரசபை**
**2019.07.24**





விலைக் கழிவு

தில்லையம்பதி மோட்டோர்ஸ்
THILLAIYAMPATHYS MOTORS

ஜூலை 24 முதல் ஜூலை 28 வரை

Dealers in:
Agriculture & Electric Water Pumps,
Power Tools,
Engineering Tools,
Generators,
Machines

அனைத்து பிரண்டட் வகை உபயோக பொருள்களும் மலிவு விலையில் வாங்கலாம்.



100, Stanley Road, Jaffna.
T:021 222 5710 F:021 222 4542
E-mail:tmotorsin@yahoo.com


"ஓராண்டில் இசைவாணியின் கீதாஞ்சலி"




**கலாபூஷணம், சங்கீத ரத்தினம், ஈழத்துப்பட்டம்மாள்**

## திருமதி ஞானகுமாரி சிவநேசன்

திதி:- ஆனி அபரபக்க அட்டமி



இசையுலகின் நட்சத்திரமாய், இசைப்பேறு நல்கி
திசையெங்கும் தேன் சொட்டிய தலைவி – அசையாத
யாழ்.மண்ணை வரமாக்கிப் பஞ்சரத்தினமாய் வாழ்ந்த
ஏழிசை வாணி ஞானகுமாரி

ஆயிரம் மேடை கண்டு அபூர்வ இராகங்கள் கொண்டு
பாயிரமாய்ப் பூத்தவளே பட்டம்மாள் – தாயவள்
சங்கத் தமிழிசைக்குச் சாகாத வரமளித்தவளே
மங்காத தங்கர் மகள்


நாளை (25.07.2019) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் முதலாமாண்டு நினைவஞ்சலியும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் தாங்கள் வருகை தந்து கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முதலாம் கட்டை,
மானிப்பாய் வீதி, உடுவில்.
077 309 0580

அன்புக் கணவர் - வ.சிவநேசன்
அன்பு மகன் - சி.மயூரன்
அன்பு மருமகள் - ம.மேகதர்ஷினி

(CS/25700) (1197)

## மரண அறிவித்தல்கள்



திருமதி

### மனோறஞ்சித நீற்றா யோசவ் சொலமன்

நாரந்தனையைப்பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட மனோறஞ்சித நீற்றா யோசவ் சொலமன் கடந்த (20.07.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவற்பிள்ளை - அக்னஸ் தம்பதிகளின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான சொலமன் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் யோசவ் சொலமன் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு திணைக்கள தொழில்நுட்பஇயக்குநர்) அவர்களின் அன்பு மனைவியும் ஜீன் சோபியா (ஜேர்மனி), றெனோ லெஸ்லி (ஜேர்மனி), ஜெயோன் வோஜியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராசா, றாஜ்குமார், மொறின் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரோஷன், றொஷான், நிதர்ஷன், ஜவானா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சாளெற், இராசநாயகம், மனோன் மற்றும் வைலற், சோதி,லூர்த்துமலர், விஜயா ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 26.07.2019 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன் தாழ்வு.**

**தகவல்:**
**சகோதரி பேணடேற் (சோதி)**
**0714004080**

## மரண அறிவித்தல்கள்



**தோற்றம்** 02 . 03 . 1932

**மறைவு** 23 . 07 . 2019

### திருமதி கனகம்மா தம்பிராசா

மூளாயைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா தம்பிராசா நேற்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சைக்கிள் கடை தம்பிராசாவின் அன்பு மனைவியும் கதிரவேலு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சுப்பையா, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராதா, யோகேஸ்வரி, குணராசா, மனோகரன், வரதராசா(சைக்கிள் கடை), யோகேஸ்வரன், ஈஸ்வரி, பற்குணராசா (Welcome Motors, சுன்னாகம்), விக்கினேஸ்வரி, சற்குணராசா (சந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தெய்வேந்திரம் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தவராசா, புஸ்பராணி, நகுலேஸ்வரி, தவமலர், சந்திராதேவி, பிரபாலினி, கஜனி, சிவபாலசிங்கம் (ராசு) ஆகியோரின் மாமியாரும் அவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2019) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் (நவாலி வடக்கு, புலவர் வீதியிலுள்ள சற்குணராசா (சந்திரன் இன் இல்லத்தில்)) நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 631 3655**
**077 608 5149**

**தகவல்**
**குடும்பத்தினர்.**



**தாயின் மடியில்** 10 . 05 . 1924

**காலன் மடியில்** 23 . 07 . 2019

### தம்பிராசா காசிலிங்கம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், கனடா றொரண்டோவை தற்போதைய வசிப்பிட்மாகவும் கொண்ட தம்பிராசா காசிலிங்கம் நேற்று (23.07.2019) செவ்வாய்க் கிழமை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிராசா தம்பதிகளின் ஏக புதல்வரும், இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தெய்வானை,செல்லம்,மனோன்மணிஆகியோரின்அன்புச்சகோதரரும்,லோகநாதன் (லோகன் - ஜேர்மனி), லோகேஸ்வரி (தேவி - கனடா), சந்திரநாதன் (குட்டி - நீர்வேலி), புவனேஸ்வரி (பவா - கனடா), ஜெகநாதன் (பொக்கன் - சுவிற்சர்லாந்து), லவேந்திரன் (அப்பன் - லண்டன்), கமலாதேவி (பொக்கம்மா - டென்மார்க்), சிவனேஸ்வரி (சிவா - கனடா), அழகநாதன் (தம்பி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம், இராசபாக்கியம், நந்தினிதேவி, கந்தசாமி, பத்மாசினி, மைதிலி, தயாபரன், சுதாகரன், கிருஸ்ணஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இராஜவீதி, நீர்வேலி மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**
1 Fairly drive,
Markham 13S2Z7, Canada.

**தகவல்:**
**கா.சந்திரநாதன் (குட்டி)**
**021 223 2375 -**
**நீர்வேலி.**

(CS/26878) (11.17)

4164 28 9138 - Siva, 416 522 1629 - Bava,
6477 716 805 - Loges, 416 732 3279 - Alagan



**பிறப்பு** 22 . 12 . 1964

**இறப்பு** 23 . 07 . 2019

### காசிப்பிள்ளை வரதராசா

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை வரதராசா நேற்று (23.07.2019) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நடராசா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சறோஜினிதேவியின் அன்புக் கணவரும், சசிதரன், புவிதரன், பிரியங்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவநேசன் (கனடா), காந்தகுமார் (லண்டன்), சுசிலாதேவி ஆகி யோரின் அன்பு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2019) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியள வில் பூதவுடல் காரைகால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டுவினி,**
**இணுவில் மேற்கு,இணுவில்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

## பணியாளர் தேவை

புடைவை வாணிபத்துக்கு ஆண் பணியாளர் தேவை.

**இடம்:- கிளிநொச்சி, 077 953 0753**

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் **Tourist Hotel** ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

**வரவேற்பாளர் :-** ஆண்கள், பெண்கள் இருபாலாரும்

**077 789 9807**

## நானாட்டான் பிரதேச சபை

### அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினால் நானாட்டான் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கமைவாக கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடத்தினை உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் நிரப்புவதற்காக தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவியும் தரமும் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சுகாதாரத்தொழிலாளி | 01 |

**சம்பள அளவுத்திட்டம்**

2016.01.01 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கமைவாக (PL-1-2016) 24250 - 10X 250-10 X270 -10 X300-12X330 – 36410

**பொது நிபந்தனைகள்**

01. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதும் ஆகும். தங்களுக்குரியஓய்வுதியத்திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.
02. ஊழியர்கள் விதவைகள் / தபுதாரர்கள். அநாதைகள் ஓய்வுதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் 03 வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
03. நல்லொழுக்கமுடையவராகவும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பதாரி நானாட்டான் பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும். கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும் .

**கல்வித்தகைமை**

க.பொ.த சாதாரண தரத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 06 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன். இரண்டு பாடங்களில் திறைமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே அமர்வில் 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். போதியளவு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காத பட்சத்தில் கௌரவ ஆளுனரினால் அனுமதியளிக்கப்பட்டதன்படி பாடசாலை ஒன்றில் தரம் 08 அல்லது தரம் 09 இல் சித்தியடைந்திருத்தல் கல்வித்தகைமையாகக் கொள்ளப்படும்.

**வேறு தகைமைகள்**

மேலதிக தகைமைகள். அனுபவம் விசேட தகைமையாகக் கருத்தில் கொள்ளப்படும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையினால் நடாத்தப்படுவதுடன். தகைமைகளும் பரீசீலிக்கப்படும். பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. நானாட்டான் பிரதேச சபையின் பிரதான அலுவகத்தில் ரூபா.100.00 இனைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
02. விண்ணப்படிவத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாது இருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தப்பட்டு செயலாளர் நானாட்டான் பிரதேச சபை. நானாட்டான் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ அல்லது பின்னராகவோ முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானது எனத்தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் இரத்துச் செய்யப்படும்.


**விண்ணப்ப முடிவுத் திகதி: 20.08.2109**

**நானாட்டான் பிரதேச சபை,**
**நானாட்டான்.**
**23.07.2019**

**திரு.எஸ்.லோகேஸ்வரம்,**
**செயலாளர்,**
**நானாட்டான் பிரதேசசபை.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 20 • 05 • 1934



மறைவு 21 • 07 • 2019

### திரு. நாராயணன் சங்கரப்பிள்ளை

(B.Sc – Hons. , Calcutta University, India, Dip-in-Edu. , Peradeniya University – , முன்னாள் திட்ட இணைப்பாளர் - UNHCR Projects, சர்வோதயம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் திருகோணமலை)

பருத்தித்துறை – வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும் இல.35 பலாலி வீதி யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல. 29 புகையிரத விடுதி திருகோணமலையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாராயணன் சங்கரப்பிள்ளை அவர்கள் 2019.07.21 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. நாராயணன் – திருமதி. இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.பொன்னையா – திருமதி. இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி. பாக்கியத்தின் (BA – ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் திருமதி. ம. ஹேமலதா (BSc – முன்னாள் ஆசிரியை தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி – கனடா) காலஞ்சென்ற செல்வி. ஸ்வர்ணலதா (BA,Dip–in. Edu., English Trained, முன்னாள் ஆசிரியை – யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) காலஞ்சென்ற செல்வி. கீதாஞ்சலி (BA, English Trained, முன்னாள் ஆசிரியை – யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்) செல்வி. மீரா ( இலங்கை புகையிரதத் திணைக்களம்) திருமதி. சு.வாணி (இந்தியா) திரு. பாலமுரளி (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. மகேஸ்வர், திரு. சுரேஷ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி, பிரதீப், ரிஷி, ஓவியா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் காலஞ்சென்ற திரு. பூபாலசிங்கம், திருமதி. சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற திருமதி. சின்னமணி, திருமதி. ஜெயலட்சுமி, திருமதி. ஜீவரட்ணம், செல்வி. மல்லிகா ( ஓய்வு பெற்ற ஆசிரியை) திரு. தவகுலரட்ணம்ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற திரு.இராசையா (ஓய்வு பெற்ற உதவிப் போக்குவரத்து அத்தியட்சகர் – புகையிரதத் திணைக்களம்), காலஞ்சென்ற திரு.பூவிலிங்கம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), திரு. இராசரத்தினம் திரு. சிவஞானம் (ஓய்வு நிலை பொறியியலாளர் – இ.போ.சபை), திரு.பரமானந்தம் (பிரான்ஸ்) திருமதி. பரமேஸ்வரி (ஓய்வு நிலை உப அதிபர்), திரு. பாலச்சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல.35 பலாலி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 2019.07.25 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**தொடர்பு : 021 222 0096** **தகவல்: குடும்பத்தினர்**

# சிலந்தி



- உழைப்பு என்றால் எறும்பையும் முயற்சி என்று சொன்னால் சிலந்தியையும்தான் உதாரணமாகச் சொல்வார்கள்.
- சிலந்தி என்றதும் எம் நினைவுக்கு வருவது அதன் வலைதான். இந்த வலைதான் சிலந்தி வாழ்வதற்கான இருப்பிடமாக உள்ளது.
- சிலந்தியின் வாயிலிருந்து வரும் எச்சிலைக் கொண்டு இந்த வலை பின்னப்படுகிறது. இந்த வலையில் வந்து விழும் பூச்சிகளை இரையாக்கிக்கொண்டே சிலந்தி வாழ்கிறது.
- வலையின் ஆயுள்காலம் முடிந்து அது பழையதாகும்போது அந்த வலையை விட்டு விட்டு வேறொரு வலையைப் பின்னத் தொடங்குகிறது சிலந்தி.
- பூச்சி இனத்தைச் சேர்ந்த சிலந்தியில் கோடு போட்ட சிலந்தி என்றும், சிறிய சிலந்தி என்றும் பல வகைகள் உள்ளன.
- பெண் சிலந்திகள் வேட்டையாடுவது மற்றும் வலையில் உள்ள சிலந்திகளின் பாதுகாப்பில் கவனம் செலுத்திவரும்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1976 இல் பிறந்த அவிட்டம் நட்சத்திரம் கொண்ட மணமகளுக்கு தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

**076 575 9934**

## விற்பனைக்கு

01 வயதும் 02 மாதமும் நிரம்பிய ஆண் டோமன் நாய் மற்றும் 08 மாதம் நிரம்பிய பெண் டோமன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 077 659 0606**
**நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.**

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee. Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work/ Service Details | Non – refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ Of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation works at Old Operation Theater, Renovation of Sum near the Old Operation Theater and Construction of Room at JICA Corridor. | 500.00 | 30,000.00 | 91 | 1.37 | C9 |
| 2. | Modification of Angiography Room at JICA | 500.00 | 30,000.00 | 91 | 1.46 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 24.07.2019 up to 05.08.2019 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 06.08.2019, Late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

**Director ( Chairman),**
**Regional Procurement Committee,**
**Teaching Hospital, Jaffna.**

**24.07.2019**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பயங்கரவாதத் தடைச்சட்ட நீடிப்பு அவசியமற்றது

அவசர காலச் சட்டம் மீண்டும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி கத்தோலிக்கத் தேவாலயங்கள் மீதும் கொழும்பு உல்லாச விடுதிகள் மீதும் நடத்தப்பட்ட கொடூரமான தற்கொலையாளிகளின் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஒரு மாத காலத்திற்குப் போடப்பட்ட அந்தச் சட்டம் பின்னர் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டது. அதன் பின்னர் அதனை நீடிக்கப் போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர் ஆணையர்களிடம் தெரிவித்திருந்தார். அதனையும் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த மாதம் 8ஆம் நாள் முஸ்லிம் அரசியல் தலைவர்களைச் சந்தித்தபோதும் அரச தலைவர் இதனையே கூறியிருந்தார். இனிமேல் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படாது என்றார் அவர். ஆனால் இம்முறையும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது. தான் வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாறாக அவசரகாலச் சட்டத்தைத் தான் ஏன் நீடிக்கிறார் என்பதற்கு அரச தலைவர் காரணம் எதனையும் முன்வைக்கவில்லை.

போர் நடைபெற்ற காலப் பகுதி முழுவதும் அவசரகாலச் சட்டம் இலங்கையில் நடைமுறையில் இருந்தது. போர் முடிவுக்கு வந்த நிலையில் தொடர்ந்தும் அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத சூழலில் பயங்கரவாதத் தடைச்சட்டம் திருத்தப்பட்டு அவசரகாலச் சட்ட விதிகளில் முக்கியமானவைகள் அந்தச் சட்டத்துடன் சேர்க்கப்பட்டன. எனவே தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதச் தடைச் சட்டமே வன்முறை நடவடிக்கைகளை ஒடுக்குவதற்குப் போதுமானதாக இருக்கும்போது அவசரகாலத் தடைச்சட்டம் ஏன் தொடர்ந்தும் நீடிக்கப்படுகின்றது என்பதற்கான திருப்திகரமான பதில் அரச தலைவரிடம் இருந்து கிடைக்கவில்லை.

இந்த நிலையில் மாதாமாதம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவது கண்டனத்துக்குரியது. உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டு வெடிப்புக்களுக்குப் பின்னர் வேறு எந்தவகையிலான வன்முறைகளும் இடம்பெறவில்லை. சந்தேகத்திற்கிடமான வெடிப்பொருள்கள் கைப்பற்றப்படவில்லை அல்லது தாக்குதல் இலக்குகள் இருந்ததாகப் பகிரங்கத் தகவல்களும் ஏதுமில்லை. அப்படியிருக்க அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு அவசியமும் ஏதுமில்லை.


மிகையான அதிகாரங்களை ஆயுதப் படையினருக்கு வழங்கும் இந்த அவசரகாலச் சட்டத்தினால் சித்திரவதைகளும் கொடுமைகளும் வகைதொகையின்றி நடந்திருக்கின்றன. அந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான கண்டனங்கள் மனித உரிமைகளுக்கான பன்னாட்டு நிறுவனங்களால் பல தடவைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு இந்தச் சட்டம் காரணமாக அமைந்தமை வரலாறு.

அத்தகையதொரு நாட்டில் மீண்டும் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்பட்டிருக்கின்றமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. அவசியமும் இல்லாதது. நாட்டின் பாதுகாப்பு என்கிற பெயரால் அரசியல் சுயலாபங்களுக்காகவே அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படுவதாகவே தோன்றுகின்றது. எனவே உடனடியாக அவசரகாலச் சட்ட நீடிப்பு நிறுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அனுமதியளிக்கப்படவேண்டும்.

# தெற்கு அரசியல்வாதிகளை இனியும் நம்புவது நியாயமா?

இந்துமதி

கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பான பிரச்சினை தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மட்டுமல்லாது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும் தலையிடியாக உருவெடுத்துள்ளது. கல்முனை வடக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அமைக்கப்பட்ட உப பிரதேச செயலகத்தில் எவ்வித வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் அந்த மக்கள் எதற்கெடுத்தாலும் முஸ்லிம்களின் பகுதியில் அமைந்துள்ள பிரதேச செயலகத்தை நாட வேண்டியதொரு அவலநிலை காணப்பட்டது. மிக நீண்ட காலமாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. இந்தப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு முஸ்லிம் தரப்பினர் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றமையே இதற்கான காரணமாகும்.



**தரமுயர்த்தப்படுவதை தடுக்கின்றனர் முஸ்லிம்கள்**

கல்முனை வடக்கில் வாழ்கின்ற தமிழர்களுக்கு எதுவுமே கிடைத்துவிடக் கூடாது என்பதில் முஸ்லிம் தரப்பு உறுதியாக இருப்பதையும் காணமுடிகின்றது. இனியும் பொறுக்க முடியாது என்பதால் தமிழர்கள் அறவெளிப் போராட்டத்தை அண்மையில் ஆரம்பித்தனர். கல்முனை விகாராதிபதி இதில் முக்கிய பங்கு வகித்தார். ஞானசார தேரர் உள்ளிட்ட சில பௌத்த தேரர்களின் ஆதரவும் இதற்குக் கிடைத்தது. இதன் காரணமாக அரசு தமிழர்களுக்குச் சர்பான சில வாக்குறுதிகளை வழங்கியது. முஸ்லிம் தரப்பினர் தமிழர்களின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் தாமும் ஒரு போராட்டத்தை நடத்திக் காட்டினர். தமிழர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேறவிடாது தடுப்பதிலேயே அவர்கள் தமது முழுக்கவனத்தையும் அங்கு செலுத்தினார். தமிழர்களுக்கு எதிரான கருத்துப் பயன்பாடுகளும் அங்கு தாராளமாக இடம்பெற்றன. அங்கு உரையாற்றிய அதாவுல்லா போன்ற இனவாதிகள் தாம் தமிழைப் பேசுவதில்லையெனவும், அரபுத் தமிழே தமது பாவனையில் உள்ளதாகவும் புதுக் கதையொன்றைக் கூறி அனைவரையும் குழப்பினர். தமிழர்களை அவர்கள் எந்த அளவுக்கு வெறுக்கிறார்கள் என்பதை இதன் மூலமாகத் தெளிவாக அறிய முடிந்தது.

**என்ன செய்யப்போகிறார் தலைமை அமைச்சர் ரணில்?**

இந்த விவகாரத்தில் தமக்கு நீதி கிடைப்பதற்கு அரசையும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் தமிழர் தரப்பு முற்றாக நம்பியது. தலைமை அமைச்சரும் அவ்வப்போது வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தார். மக்கள் விடுதலை அரசுக்கு எதிராகச் சமர்ப்பித்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறு அதிகளவில் காணப்பட்டது. இதனால் அச்சமடைந்த ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் காலில் வீழ்ந்தார். கல்முனை விவகாரத்தில் தமிழர்களுக்குச் சார்பாகவே அனைத்தும் நடக்குமென உறுதிமொழி வழங்கினார். இதைப் போன்றே முஸ்லிம் தரப்புக்கும் அவர் வாக்குறுதியை வழங்கியிருப்பார் என்பது இப்போது தெரிய வருகின்றது. இதன் காரணமாகவே கூட்டமைப்பும், முஸ்லிம் பிரதிநிதிகளும் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தாகக் கருத வேண்டியுள்ளது.

முக்கியமான தேர்தல்கள் இடம்பெறவுள்ளதால் ரணில் விக்கிரமசிங்க தமிழர்களை மட்டுமல்லாது முஸ்லிம்களையும் பகைத்துக்கொள்ள மாட்டாரென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இந்த நிலையில் கல்முனை விவகாரத்துக்கு ஒரு தீர்வை வழங்குவதற்கு அவரால் முடியுமா? என்ற கேள்வியும் எழுகின்றது.

கூட்டமைப்பு ஆரம்பம் தொடக்கம் இன்று வரை அரசுக்கு ஆதரவை வழங்குவதையே தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. ஆனால் அரசின் சார்பில் தலைமை அமைச்சரால் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையுமே நிறைவேற்றப்படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டிய நிலைக்குள் கூட்டமைப்பு தள்ளப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தல்களில் இதன் பிரதிபலிப்பைக் காண முடியும்.

அதேவேளை மகிந்த ராஜபக்சவுக்கு கூட்டமைப்பு ஒருபோதுமே ஆதரவை வழங்காதென்ற எண்ணமும் தலைமை அமைச்சரிடம் இருக்கக் கூடும். ரணிலைப் புறமொதுக்கிவிட்டால் மகிந்த பக்கம் சாய வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் மகிந்த ஆட்சியில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தமிழர்கள் இன்னமும் மறக்கவில்லை. கல்முனை விவகாரத்தில் தமிழர்களுக்குச் சாதகமானதொரு தீர்வு கிடைக்காது விட்டால் முஸ்லிம் தரப்பினருடன் எதிர்காலத்தில் நல்லுறவைப் பேணுவது தொடர்பாகத் தமிழர்கள் சிந்திப்பதில் அர்த்தமே கிடையாது. தந்தை செல்வா அனைத்து விடயங்களிலும் தமிழர்கள் முஸ்லிம்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென அன்று கூறியது இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஏனென்றால் தமிழர்களை அரவணைத்துச் செல்லும் நிலையில் முஸ்லிம்கள் இல்லை. அவர்கள் சகல விடயங்களிலும் தனித்துவமாகச் செயற்படுவதையே விரும்புகின்றனர். அத்துடன் தமிழர்களுடன் சுமுகமாக நடந்து கொள்ளவும் அவர்கள் தயாராகவில்லை என்பது கல்முனையில் தெட்டத் தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஆகவே தமிழர் தரப்பு தென்பகுதி அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளில் இனியும் மயங்கி இருப்பதில் எவ்வித அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து போராடித்தான் தமது உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். மற்றவர்களை நம்பி இருப்பதால் பயனொன்றும் கிடைக்க மாட்டாது.



# வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 1,906 பட்டதாரிகளுக்கு நியமனம்

## *மாவட்டந்தோறும் தலா 40 பேருக்கு ரணிலின் அலுவலகத்தில் நியமனம் கடிதம்*

யாழ்ப்பாணம், ஜூலை 24

**அரச வேலை தேடும் பட்டதாரிகளில் நாடு முழுவதும் வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 800 பேருக்கான நியமனப் பட்டியலின்படி, வடக்கு மாகாணம் முழுவதுமாக ஆயிரத்து 906 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர் விவரங்கள் 5 மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.**

வேலையற்ற பட்டதாரிகளின் விவரங்கள் மாவட்ட ரீதியில் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கான நேர்முகத் தேர்வுகளும் இடம்பெற்ற நிலையில் முதற் கட்டமாக 4 ஆயிரம் பேருக்கு அரச நியமனம் வழங்கப்பட்டிருந்தது. தற்போது 16 ஆயிரத்து 800 பேருக்கு நியமனம் வழங்குவதற்கான பெயர்ப் பட்டியல்கள் சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 137 பட்டதாரிகளுக்கும் வவுனியா மாவட்டத்தில் 199 பட்டதாரிகளுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரத்து 281பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 140 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 149 பேருக்கும் நியமனம் வழங்கும் வகையில் பெயர்ப்பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன்படி மொத்தம் ஆயிரத்து 906 பேரின் பெயர் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பெயர் விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அனைவரும் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அரச நியமனத்தில் உள்வாங்கும் வகையில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

அவர்களுக்கு நியமனம் வழங்கப்படும் இடங்களில் அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனங்கள் மாவட்டத் தோறும் 40 பேருக்கு தலைமை அமைச்சர் அலுவலகத்திலும் ஏனையோருக்கு மாவட்டச் செயலகங்கள் ஊடாகவும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-105)

# வவுனியாவில் விபத்து முதியவர் படுகாயம்




வவுனியா,ஜூலை24

வவுனியா வைரவப்புளியங்குளத்தில் நேற்று நடந்த உந்துருளி விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா நகரப்பகுதியிலிருந்து குருமன்காடு நோக்கி உந்துருளியின் பயணித்துக் கொண்டிருந்த முதிவரை அதே பகுதியில் பயணித்த பிறிதொரு உந்துருளி முந்திச்செல்ல முயற்சித்தபோது விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த 1990 நோயாளர் காவுவண்டிக் முதல் உதவி குழுவினர் உடனடியாக படுகாயமடைந்து மயக்கத்திலிருந்த வயோதிபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து வவுனியா பொது மருத்துவமனையின் விபத்துப் பிரிவில் சேர்ப்பித்தனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(எ)

# முன்னாள் துணைவேந்தருக்கு யாழ் விருது

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு வருடாந்தம் வழங்கும் உயர் விருதான யாழ் விருது இந்த வருடம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளைக்கு வழங்கப்படவுள்ளது என்று குழு தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சைவ சமய விவகாரக் குழுவின் கூட்டத்தில் இந்த தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளது. நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் வெளியிடப்படும் நல்லைக் குமரன் நூல் வெளியீட்டு விழாவில் வழங்கப்படும் உயரிய விருதாக இந்த விருது வருடாந்தம் வழங்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-7)

# காரைநகரில் தனிமையில் தவித்த 80 வயது முதியவர்

## *மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பு*



யாழ்ப்பாணம்,ஜூலை24

உண்ண உணவின்றி உயிரைக் கையில் பிடித்தவாறு எழும்பும் தோலுமாக தனிமையில் தவித்த முதியவர் ஒருவர் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சோகச் சம்பவம் நேற்று காரைநகரில் நடந்துள்ளது.

ஓய்வூதியத்தைப் பெறும் முதியவராக இருந்த போதும் அவர் உணவேதுமின்றி எழும்பும் தோலுமாக அவர் தனித்திருந்தது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. காரைநகர் மொந்திபுலத்தில் உள்ள பாலசிங்கம் (வயது-80) என்னும் முதியவரே இவ்வாறு மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இயக்கமற்ற நிலையில் எலும்பும் தோலுமாக, இருந்த முதியவரை காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் மீட்டு காரைநகர் மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். மருத்துவமனையில் அவருக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முதியவருடைய மகள் ஒருவர் மருத்துவனைக்கு வந்து முதியவரை அழைத்துச் சென்றுள்ளார்.

அரச பணிபுரிந்து ஓய்வூதியம் பெறும் இந்த முதியவரைப் பராமரிப்பதற்கென அவருடைய பிள்ளைகள் வேலைக்கு ஆளை நியதித்துள்ளனர்.

எனினும் ஓரிரு நாள்களாக வேலைக்கு நியமிக்கப்பட்டவர் வராததன் காரணமாகவே முதியவருக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

(எ-21,250)

# பொதுக் கூட்டம்

கொடிகாமம், ஜூலை 24

மந்துவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ் கலவன் பாடசாலையின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கான சிறப்புப் பொதுக்கூட்டம் இன்று காலை 7.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் ந.தமிழ்ச்செல்வன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

(எ-159)

*மன்னார் மாவட்டத்தில்*

# ஆயிரம் குடும்பங்களுக்கு விரைவில் காணி உரிமம்

யாழ்ப்பாணம்.ஜூலை 24

மன்னார் மாவட்டத்தில் அரச காணியில் தங்கியிருப்பவர்களுக்கான காணி உரிமைப் பத்திரங்கள் அடுத்த மாதம் வழங்கப்படும் என்று பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மன்னார் மாவட்டத்தில் மக்கள் அரச காணிகளில் தமது வீடுகளை அமைத்துத் தங்கியிருந்தனர். ஆனால் அவர்களுக்கான முறையான காணிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு உள்ளாவதாக மக்கள் தெரிவித்தனர். ஒவ்வொருவரும் சுமார் 3 பரப்பு வரையில் அரச காணிகளில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தலை மன்னார் பகுதியில் சுமார் 850 குடும்பங்கள் உட்பட மன்னார் மாவட்டத்தில் ஆயிரம் பேருக்கு அடுத்த மாதம் காணிகளுக்கான பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7)

# மழலைகள் விளையாட்டு விழா

வரணி குடும்ப முன்பள்ளிகளின் மழலைகள் விளையாட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் வரணி முன்பள்ளிகளின் இணைப்பாளர் திருமதி றோகிகன் கேதிகா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், வரணி மத்திய கல்லூரி அதிபர் ப.செல்வவிநாயகம், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் சி.பிரபாகரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(எ-159)

# வீட்டிலிருந்தவர்களைக் கட்டிப்போட்டு கிடங்கு தோண்டி மூடியது ஒரு குழு!

## *விசுவமடுவில் இப்படியொரு சம்பவம் பொலிஸார் தேடுதல் மற்றும் விசாரணையில்*

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி விசுவமடு நாதன்திட்டம் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த 7 பேர் கொண்ட இனந்தெரியாத கும்பல் அங்குள்ளவர்களைக் கட்டிப்போட்டுவிட்டு வீட்டு வளாகத்தில் கிடங்கு தோண்டிப் பின்னர் மூடிவிட்டுச் சென்றுள்ளனர். இது அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதனையடுத்து நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸார் கடந்த சனிக்கிழமை தேடுதலில் ஈடுபட்டனர்.

அங்கு கிடங்கு ஏன் தோண்டினார்கள் என்பது புதிராகவுள்ளது.

அந்த வீட்டில் நடக்கமுடியாத பெண்ணும் அவருடைய மகனும் இருந்துள்ளனர். அவர்களின் கைகள், கால்கள், கண்கள் மற்றும் வாயைக் கட்டிவிட்டு ஒரு அறைக்குள் இருவரையும் வைத்து பூட்டிவிட்டு கிடங்கு தோண்டியுள்ளனர். அதற்குள்ளிருந்து ஏதாவது எடுத்தார்களா? எதுவும் இருக்கவில்லையா? என்ன காரணத்துக்காகத் அவ்வாறு தோண்டினார்கள்? என்ற கேள்விகளுக்குப் பொலிஸார் விடை தேடுகின்றனர். சந்தேகநபர்கள் தோண்டிய கிடங்கை இரவு 9 மணியளவில் மூடிவிட்டு அதன்பின்னர் சிறுவனின் கட்டுக்களை மட்டும் அவிழ்த்துவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.



அவர்கள் யார்? எந்த இடத்தைச் சேர்ந்தவர்கள் என்பது எதுவும் தெரியவில்லை. பொலிஸார் குறித்த கிடங்கை மீளவும் தோண்டி சோதனையில் ஈடுபட்டனர். புலன் விசாரணையிலும் ஈடுபட்டுள்ளனர்.

(த-6)



## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம் சாவகச்சேரி மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான சி.சிவதாசன், ச.நாகராஜா ஆகியோர் கலந்து கொண்டு மாணவத் தலைவர்களுக்கு சின்னங்களைச் சூட்டினர். (ஐ-9)

## வடமராட்சி களப்பு குடிதண்ணீர்த் திட்டம் அடுத்தமாதம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 24
வடமராட்சி களப்பு குடிதண்ணீர்த் திட்டம் அடுத்த மாதம் அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக ஆளுநரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
"வடமராட்சி களப்பு குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் நகர திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் சுமார் 6 லட்சத்து 30ஆயிரம் மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக பொறியியலாளர் குகனேஸ்வரராஜாவால் முன்மொழியப்பட்ட இந்தத் திட்டம் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதுடன் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அடுத்தமாதம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது."என்றுள்ளது. (ஐ-7)

தென்மராட்சிப் பிரதேச

## கால்நடை மருத்துவர் பணியகம் அடுத்த வாரம் புதிய கட்டடத்தில்

சாவகச்சேரி, ஜூலை 24
கடந்த ஐம்பது வருடங்களுக்கும்மேலாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த தென்மராட்சி பிரதேச கால்நடை மருத்துவர் பணியகம் அடுத்த வாரம் தொடக்கம் சொந்தக் கட்டடத்தில் செயற்படவுள்ளது.
இந்த அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால் நீண்டகாலமாக வாடகை செலுத்தி தனியார் கட்டடங்களில் இயங்கிவந்துள்ளது.
தற்போது தென்மராட்சி பிரதேச செயலகத்தால் சாவகச்சேரி தனன்களப்பு வீதியில் கடலுணவுகள் விற்பனை நிலையத்துக்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தில் கால்நடை மருத்துவர் பணியகம் இயங்கவுள்ளது.
கடந்த 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் பின்னர் 2002 ஆம் ஆண்டுமக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களால் வளர்க்கப்பட்ட கால்நடைகள் மருத்துவ வசதிகளின்றிக் காணப்பட்டன.
அக்காலப் பகுதியில் இந்த நிலையம் இயங்கக்கூடிய கட்டடவசதிகிடைக்காததால் பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது.
தற்போது பிரதேச செயலகத்தில் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் கட்டட வசதிகள் இன்மையால் அலுவலர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.
அதன் பின்னர் செயலரின் நிதி ஒதுக்கீட்டில் தனன்களப்பு வீதியில் புதிதாகக் கட்டடம் அமைக்கப்பட்டது.
கடந்த 21 ஆம் திகதி வைபவரீதியாகப் பால்காய்ச்சப்பட்டதெனவும் அடுத்த வாரம் புதிய கட்டடத்தில் நிலையம் இயங்கு மெனவும் பிரதேச கால்நடை மருத்துவர் தெரிவித்தார். (ஐ-9)

## வணிகவிழா




யாழ்ப்பாணம் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வணிகவிழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சீபன் பாஸ்கர் லேணர்ஸ் அதிபர் கு.டசீபன் கலந்துகொண்டார். (ஐ-159)

அரச சேவைக்குள் ஆள்சேர்ப்புச் செய்யவென்று

# தெரிவான 16ஆயிரம் பட்டதாரிகளில் வெளிவாரிப் பிரிவினர் புறக்கணிப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 24*
*புதிதாக ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ள 16 ஆயிரம் பட்டதாரிகளில் வெளிவாரிப் பட்டதாரிகள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று வெளிவாரிப் பட்டதாரிகள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.*

நாடு முழுவதும் 16 ஆயிரம் பட்டதாரிகளை அரச சேவைக்குள் உள் வாங்கும் நோக்கில் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நியமனம் வழங்கப்படவுள்ள பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்கள் மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
அந்தப் பட்டியலில் வெளிவாரிப் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்த பட்டதாரிகள் எவருமே உள்வாங்கப்படவில்லை என்பது பட்டியல்கள் மூலம் கண்டறியப்படுவதாகச் சுட்டிக்காட்டுகின்றது.
இதன் காரணமாகப் புறக்கணிக்கப்பட்ட வெளிவாரிப் பட்டதாரிகள் அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கூடி ஆராயவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேநேரம் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியலில் அண்மையில் மாகாண சபைகளால் நியமனம் வழங்கப்பட்ட சிலரின் பெயர்களும் உள்ளடங்குகின்றன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
இந்த விடயம் தொடர்பில் குறித்த அமைச்சின் செயலர் சிவஞானசோதியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது வெளியாகியுள்ள பட்டதாரிகள் பட்டியலில் மிகச் சொற்பமானோரே வெளிவாரிப் பட்டதாரிகளாக உள்ளனர். அடுத்த கட்டமாக மிகவிரைவில் அடுத்தமாதமும் 3ஆயிரத்து 800 பேருக்கு நியமனம் வழங்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. அதில் அனைவரும் வெளிவாரிப் பட்டதாரிகளே - என்றார். (த-105)




### வீதிச் சீரமைப்புக்கு அடிக்கல்

கொடிகாமம், ஜூலை 24
யாழ்ப்பாணம் அச்சுவேலி வடக்கு விக்னேஸ்வரா கிளை வீதியின் அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட கிராம எழுச்சித்திட்ட நிதியினூடாக இவ் வீதி அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.
அடிக்கல் நடும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலிகிழக்கு பிரதேசசபை உப தவிசாளர் ம.கபிலன், வலிகிழக்கு பிரதேசசபை உறுப்பினர்கள் இ.செல்வராஜா, சி.அகீபன், அ.உதயகுமார், கோப்பாய் அபிவிருத்தி அலுவலகர் ஆர். ஞானமாலா, சனசமூக நிலையத் தலைவர் கிருஸ்ணராஜா, செயலாளர் குகநேசன், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகர் வதனராஜா எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)

கடந்த மார்ச் மாதத்தில்

## விபத்துக்களில் சிக்கிய 184 பேர் மந்திகை மருத்துவமனையில்

பருத்தித்துறை,ஜூலை 24
வடமராட்சிப் பிரதேசத்தில் கடந்த மார்ச் மாதத்தில் வீதி விபத்துக்களில் சிக்கிய 184 பேர் பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்ட தாக மருத்துவமனையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
காயமடைந்தவர்களில் 94 பேர் பெண்கள் எனவும் 90 பேர் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இவர்களில் பெரும்பாலானோர் 13 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.
விபத்தின்போது கால்கள், பாதங்கள், இடுப்புப் பகுதி போன்றவை பாதிக்கப்பட்ட 117 பேரும், கைகள், தோள் மூட்டு, விரல்கள் என்பன பாதிக்கப்பட்ட 46 பேரும் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர்.
விபத்துக்கள் இடம்பெற்ற வேளையில் இருவர் மட்டுமே போதை நிலையில் விபத்தில் சிக்கி காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## மாணவர்களின் சுற்றாடல் முகாம்

சாவகச்சேரி, ஜூலை 24
யாழ்ப்பாணம் மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை மாணவர்களின் சுற்றாடல் முகாம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.
அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சி.சிவதாசன், கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எஸ்.நாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

### அலங்கார உற்சவம்

வடமராட்சி,ஜூலை 24
யாழ்ப்பாணம் மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.
எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை ஆடிப்பூரத் தினத்தன்று இடம்பெறும் தீர்த்த உற்சவத்துடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும்.
ஆலயக் குருக்கள் க. துளசிக்குருக்களின் உதவியுடன் புற்றளை சித்திவிநாயகர் ஆலய முதன்மைக் குரு சோ.ஜெயபாலசுந்தரக் குருக்கள் முதன்மைக் குருவாக இருந்து உற்சவத்தை நடத்திவருகின்றார். (ஐ-173)

## ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகை வெளியீடு

ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகையின் இந்த மாதத்துக்கான இதழ் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.
ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வெளியீட்டுரையைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச்சேர்ந்த செல்வி தயாளினி குமாரசாமியும், மதிப்பீட்டுரையை ஆசிரியர் சைவவபபுலவர் திருமதி சசிலேகா ஜெயராஜனும் நிகழ்த்துவர்.
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் மாதம்தோறும் ஞானச்சுடர் ஆன்மிகச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. (ஐ-173)

### போதையில் சாரத்தியம்

## மன்னாரில் 6 பேர் கைது தண்டனை உறுதியானது

### வழக்கு ஒத்திவைப்பு

தலைமன்னார், ஜூலை 24

மது போதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் ஆறு பேரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்கள் தம் மீதான குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். தண்டனைத் தீர்ப்புக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டு அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டில் 6 பேருக்கும் எதிராகத் தனித்தனியே வழக்குத்தாக்கல் செய்து மன்னார் நீதிவான் மன்றில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸார் முற்படுத்தியிருந்தனர்.

ஒவ்வொருவரையும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்த நீதிபதி தண்டனைத் தீர்ப்புக்காக வழக்குகளை ஒத்திவைத்தார். (கு-60)

## கற்றாழை பிடுங்கியவர்கள் செலுத்தினர் ரூ.20 ஆயிரம்


தலைமன்னார், ஜூலை 24

கடற்கரையோரத்தில் வளர்ந்திருந்த கற்றாழைச் செடிகளை வியாபார நோக்கில் பிடுங்கிய நால்வருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மன்னார் வங்காலைக் கிராம கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட கற்றாழைச் செடிகளை அவர்கள் பிடுங்கியுள்ளனர். பொலிஸார் நால்வரையும் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்து மன்னார் நீதிவான் மன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தினர். சந்தேகநபர்கள் சட்டத்தரணி செ.டினேசன் முன்னிலையானார்.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நான்கு நபர்களும் தங்கள் மீதான குற்றங்களை எற்றுக் கொண்டனர். அதனையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (கு-60)

# மன்னார் குருந்தங்குளம் பிள்ளையார் ஆலயம் மீதான ஆர்வம் அதிகரிப்பு



மன்னார், ஜூலை 24

மன்னார் குருந்தங்குளம் பகுதியில் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கூறப்படும் குருந்தங்குளம் பிள்ளையார் கோவில் தொடர்பான ஆர்வம் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. மன்னார் மாவட்ட சைவ ஆலயங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் அங்கு சென்று வழிபட்டனர்.



மன்னார் மாவட்டத்தில் மன்னார், திருக்கேதீச்சரம், நானாட்டான், மாந்தை மேற்கு ஆகிய பகுதிகளிலிருந்து சைவ ஆலயங்களின் பிரதிநிதிகள் குழுவாக இந்தப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கோவிலுக்கு மன்னார் கள்ளியடி தேத்தாவாடியிலிருந்து காட்டுப்பகுதியூடாக 10 கிலோ மீற்றர் தூரம் வரை செல்லவேண்டும். பாதைகள் இல்லை. இடையிடையே சிறு குளங்கள். மிக வறட்சியான நிலங்களில் 'காக்கா முள்' என்று பேச்சு வழக்கில் சொல்லப்படும் விடத்தல் பெரிய முள் மரங்கள் காணப்படுகின்றன. பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக அகண்ட பலமான அணைக்கட்டுடன் குருந்தன் குளம் காணப்படுகிறது.

தற்போது பிள்ளையார் கோவில் பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது. பிள்ளையார் கோவில் சுவர்கள் கட்டப்பட்டுள்ள விதம் செங்கற்கள் மாதிரிப் போன்றுள்ளது. மன்னார் அரிப்பு அல்லிராணிக் கோட்டை மற்றும் இராசமடு காளிகோவில் கட்டடத்தை ஒத்ததாகவே இது காணப்படுகிறது. கட்டடத்தின் கூரைப்பகுதி திருத்தியமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் அங்கு காணப்படும் ஓட்டுத் துண்டங்களில் 1865 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது. கோவிலின் முன் காணப்படும் கருங்கல்லாலான ஒன்றையொன்று பார்த்த நாக உருவங்களின் நடுவில் சிவலிங்கம் ஒன்று சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆலயங்களிலும் ஒன்றையொன்று பார்த்த நாக உருவங்கள் உள்ளன.

இதுதொடர்பாகதிருக்கேதீச்சர திருப்பணிச்சபை உறுப்பினர் மா.நடேசானந்தன் மற்றும் மன்னார் சட்டத்தரணி வினோதன் ஆகிய இருவரும் கருத்து தெரிவித்தனர்.

வழமையாகவே தமிழர்கள் குளங்களை அண்மித்த பகுதிகளில் பெருங்குடிகளாக வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் குளக்கரையில் மர நிழல்களில் தெய்வங்களை வைத்து வழிபட்டு வந்தார்கள். அந்தக் காலத்தில் இவ்வாறு கற்களால் கோவில் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது இந்த இடத்தில் அதிகாரத்தில் உள்ள அரசர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவர்கள் நாகசிவ வழிபாட்டைக்கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் காணி மற்றும் கோவிலையும் பராமரித்துவரும் குமாரசுவாமி திருநாவுக்கரசு என்பவர் தெரிவித்ததாவது:

நான் அறிந்த காலத்திலிருந்து இந்தக் காணிகளில் எங்களின் மூதாதையர் வாழ்ந்தனர். இது எங்களின் பரம்பரைச் சொத்து. எனது தந்தையாரிலிருந்து முன்னோர்களுக்கு உடையார் என்ற பட்டம் உள்ளது என்று தெரிவிக்கிறார்.

இது பற்றி ஆய்வ்செய்த தொல்லியல்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்ததாவது:

இதுமறுக்கமுடியாதஉண்மை. மன்னார் குருந்தன் குளம் பகுதிக்கு சில தினங்களுக்கு முன் என்து குழுவினருடன் சென்று கள ஆய்வு மேற்கொண்டு உரியவர்களுடன் கலந்துரையாடிப் பெற்ற சான்றுப் பொருள் மற்றும் தகவல்கள் தமிழ் நாட்டுக்கும் அனுப்பப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் போர்த்துகீசர் காலத்தில்' இந்தப் பகுதியானது வைரவப்பிள்ளை உடையாருக்கு அந்நியப் பிரதானிகளால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது குருந்தங்குளம் பிள்ளையார் ஆலயப்பகுதியைப் பராமரித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருபவர்கள் அவர்களின் ஏழாவது தலைமுறையினர் என்று தெரிவித்தார். (கு-213)

## பொன்விழாவும் கட்டடத் திறப்பும்



கொடிகாமம், ஜூலை 24

யாழ்ப்பாணம் சுதுமலை அம்பாள் சனசமூக நிலையம் மற்றும் அம்பாள் விளையாட்டுக்கழகத்தின் பொன்விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றன.

சனசமூக நிலைய முன்றலில் பிற்பகல் 3 மணியளவில் நிலையத் தலைவர் சந்திரமோகன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிறப்பு விருந்தினர்களாக வலி தென்மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், பண்டிதர் க.ஈஸ்வரநாதப்பிள்ளை, வலிதென் மேற்கு பிரதேசசபை உறுப்பினர் பே.சுபாகர், உயரப்புலம் கிராம அலுவலர் எம்.ஆர்.கே. ரட்ணராஜா, அம்பாள் சனசமூக நிலைய ஆரம்பகால செயலாளர் வை.சின்னத்துரை, ஓய்வு பெற்ற அதிபர் எஸ். நாகையா உட்பட பலர் கலந்து கொண்டனர்

ஆரம்ப நிகழ்வாக ஆலய வழிபாட்டுடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். இறைவணக்கம், கொடியேற்றல் என்பவற்றையடுத்து நிலையத் திறப்பு விழா இடம்பெற்றது. நிலைய புதிய கட்டடத் தொகுதியை முதன்மை விருந்தினர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து புத்தகக் கண்காட்சி இடம்பெற்றது. விருந்தினர்கள் விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டதோடு மங்கல விளக்கேற்றல், வரவேற்பு நடனம், வரவேற்புரை, தலைவர் உரை, விருந்தினர்கள் உரை, பொன்விழா மலர் வெளியீடு என்பன இடம்பெற்றன. அடுத்து, கற்றல் நடவடிக்கைகளிலும், பல்வேறு விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களும், பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டதோடு, சாதனையாளர் மதிப்பளிப்பும் இடம்பெற்றது. (ஐ-159)

# புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பொதுமலசலகூடம் அமைக்கவும்

### வணிகர் கழகம் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூலை 24

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் பொதுமலசலகூடம் அமைக்கப்பட வேண்டும் என்று வணிகர் கழகம் புதுக்குடியிருப்புப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

25 ஆண்டுகளாகப் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் மலசலகூடம் தேவை என்பதை பல் துறை சார்ந்தவர்களிடம் கோரிக்கையாக விடுத்து வந்துள்ளோம்.

இதற்குப் பொருத்தமான இடம் நகரில் படையினர் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள இடம்தான் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னரும் பல சட்டச் சிக்கல்கள் எழுந்த போதும் பிரதேச சபையும் அதே இடத்தையே தெரிவுசெய்திருந்தது.

தற்போது அந்த இடம் மாற்றப்பட்டு ஜனசக்தி சனசமூக நிலையம் இருக்கும் காணியில் மலசலகூடம் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட இடம் பொருத்தமில்லாமல் உள்ளது. சனசமூக நிலையக் காணி மிகவும் தாழ்ந்த பகுதியாக உள்ளதால் மழை நாள்களில் வெள்ளம் தேங்கும் இடமாகக் காணப்படுகின்றது.

புதுக்குடியிருப்பு சந்திப் பகுதியில் மட்டுமே பயணிகள், வயோதிபர்கள், பெண்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றார்கள். சந்திப் பகுதியில் மலசலகூடம் அமைந்தால் மட்டுமே மக்கள் பயன்பெறமுடியும். பிரதேச சபையால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஜனசக்தி சனசமூக நிலையக் காணியும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

எனவே புதுக்குடியிருப்பு நகருக்குரிய மலசலகூடம் படையினர் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள காணி அல்லது பழைய சந்தை வளாகம் இவற்றில்தான் அமைக்கப்படவேண்டும் என்பதில் புதுக்குடியிருப்பு வர்த்தக சமூகம் மிகவும் ஆணித்தரமாக உள்ளது. வெளியிடங்களிலிருந்து வரும் மக்களுக்கு இது வசதியாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. எனவே பிரதேச சபை உறுப்பினர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து புதுக்குடியிருப்பு வணிகர் கழகத்தினருடனும் கலந்துரையாடி அதன் முடிவை எழுத்து மூலம் அறியத்தருமாறு புதுக்குடியிருப்பு வணிகர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (த-ரி3)

## வாசிகசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

கொடிகாமம், ஜூலை 24

யாழ்ப்பாணம் கோப்பாய் சிறி சபாபதி நாவலர் வாசிகசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு வாசிகசாலை நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது வாசிகசாலைக்கான சீரமைப்பு வேலைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. சீரமைப்பு வேலைகளுக்கான நிதியை ஒதுக்கித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் வாசிகசாலை நிர்வாகத்தினர், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.நிரோசன், உப தவிசாளர் ம.கபிலன், உறுப்பினர்களான இ.செல்வராஜா, சி.அகீபன், அ. உதயகுமார், கிராம அலுவலகர் கோபாலதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-159)

## நற்கருணை வழிபாடு

கிளாலி புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழாவில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் இடம்பெற்று புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறவுள்ளது. திருவிழா கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (த-17)

# மாணவர்களுக்கு பால் பை வழங்கல் வடக்கிலும் ஆரம்பம்


கொழும்பு, ஜூலை 24

ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு நாளாந்தம் காலையில் பசும் பால் பையொன்று வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இரத்தினபுரி, கலவான, கஜுகஸ்வத்த, சாஸ்திரோதய வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரச தலைவரின் பணிப்புரைக்கமைய பால் நிறைந்த தேசம் எனும் தொனிப் பொருளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிகழ்ச்சித் திட்டம், அரச தலைவர் செயலகம் மற்றும் கிராமசக்தி மக்கள் இயக்கத்துடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கல்வி அமைச்சு மற்றும் கால்நடைவள அபிவிருத்தி அமைச்சு என்பன இதற்கு பங்களிப்பு அளிக்கின்றன.

இந்த நிகழ்ச்சியின் முதல் கட்டமாக தரம் ஒன்று முதல் ஐந்து வரையிலான 4 இலட்சம் மாணவ மாணவிகளுக்கு தினசரி 150 மில்லி லீற்றர் பசும் பால் வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய சுவையூட்டப்பட்ட பாலுக்கு பதிலாக தரம் உறுதி செய்யப்பட்ட திரவப் பால் பை ஒன்று வழங்கிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக வருடத்துக்கு ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசு ஒதுக்கீடு செய்துள்ளதாக அரச தலைவர் செயலகம் அறிவித்துள்ளது. (ம)



## மின்தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், சிவநகர், கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரத்திலிருந்து (கண்டி வீதி) பூ ஓயா வரை,மதவு வைத்தகுளம், பண்டாரிக்குளம், தவசிக்குளம், தோணிக்கல், கற்குண்டமடு, ஈரப்பெரியகுளம், கார்கில்ஸ் பூட் சிற்றி, மூன்றுமுறிப்பு இராணுவ முகாம், மன்ரெரின் ஆடைத்தொழிற்சாலை ,ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம்,வவுனியா வானூர்திப் படை இணைந்த பராமரிப்பு நிலையம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை,பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, கயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை,ஶ்ரீரங்கன் அரிசி ஆலை,தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக்குளம், சின்னசிப்பிக்குளம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ்க் கட்சிகள், மக்கள் ஒற்றுமைப்பட்டால்தான் எதிர்கால சந்ததியாவது இந்த மண்ணில் வாழும்!

*இடித்துரைக்கிறார் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் லிங்கநாதன்*

*சம்பந்தன் சரியாக இருந்திருந்தால் கட்சிகள் பிரிந்திருக்காது என்றும் சாடினார்*

வவுனியா, ஜூலை 24

தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமை மற்றும் தமிழ் மக்களின் ஒற்றுமை என்பன மூலமாகவே எஞ்சி இருக்கும் தமிழ்ச் சந்ததி இந்த மண்ணில் சுதந்திரமாக வாழமுடியும், வாழ்வதற்கான வழிகளை ஏற்படுத்தும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சரியான முறையில் இருந்திருந்தால் கூட்டமைப்பிலிருந்து எந்த ஒரு கட்சியும் பிரிந்து போயிருக்கத் தேவையில்லை என்றும் அவர் இடித்துரைத்துக் கூறியுள்ளார்.

ஈரோஸ் அமைப்பின் நினைவேந்தல் நிகழ்வு வவுனியா கனகராயன்குளத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



### சகோதர முரண்பாடு

ஒவ்வொரு போராட்ட இயக்கங்களிலும் உள்ள போராளிகள் செய்த அர்ப்பணிப்புகள், தியாகங்கள் மறைக்கப்பட்டுள்ளன. பொது வேலைத்திட்டத்தில் நாங்கள் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

தமிழ் புதிய புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈரோஸ் இந்த மூன்று இயக்கங்களுமே ஆரம்பத்தில் காணப்பட்டன. அவற்றில் புதிய புலிகள் விடுதலைப் புலிகளாகவும், புளொட்டாகவும் மாறியதுடன் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். ஆகவும், ஈ.பி.டி.பியாகவும், ரெலோ சிறி ரெலோவாகவும் மாறி நிற்கின்றன.

உயிரிழந்தவர்களின் நினைவு தினங்களை நாம் கடைப்பிடித்துக்கொண்டிருப்பதற்குமப்பால் நாம் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். விடுதலை இயக்கங்களிடையே ஏற்பட்ட சகோதர முரண்பாட்டின் நினைவுச் சின்னங்கள் தான் இவை.

ஒட்டகத்துக்குக் கழுத்து நீளம் என்று கொக்கு கூறமுடியாது.

இவை நடந்த பின்னரும் சரி, சுதந்திரமடைந்து 70 ஆண்டுகள் கடந்து, 30 வருடங்கள் போரால் அழிந்தநிலையிலும்கூட இப்போதாவது நாம் திருந்திவிட்டோமா என்றால் பதில் இல்லை என்றே அமையும்.

ஒட்டகத்துக்குக் கழுத்து நீளம் என்று கொக்கு சொல்லிவிடமுடியாது. எங்கள் அனைவரிடத்திலும் விமர்சனம் இருக்கிறது. உண்மையாக போராளிகளுக்கு நாம் அஞ்சலி செலுத்த வேண்டுமாக இருந்தால் கட்சி நலனைப் புறம்தள்ளிவிட்டு இனியாவது ஒற்றுமையாக இருக்கவேண்டும்.

### அழிவு வருவதற்கு கட்சிகளே காரணம்

கட்சிகளை முன்னிறுத்தியமையால் தான் இன்று மிகப்பெரும் அழிவையும் எதனையும் செய்யமுடியாத நிலையையும் தமிழ் மக்கள் சந்தித்து வருகின்றனர். ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி பலமாகக் காணப்பட்டது.

அதன்பின்னர் போர் முடிவடையும் வரை விடுதலைப் புலிகள் பலமாக இருந்தனர். அதற்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக தமிழ் மக்கள் ஏற்றிருந்தனர். இங்கு சம்பந்தன் மீது எனக்கு விமர்சனம் இருக்கிறது.

சம்பந்தன் சரியான முறையில் இருந்திருந்தால் கூட்டமைப்பில் இருந்து எந்தவொரு கட்சியும் பிரிந்து போயிருக்கத் தேவையில்லை.

தற்போது எமக்கு ஆயுத பலம் இல்லை வெளிநாட்டுச் சக்திகளின் ஆதரவும் இல்லை.

சம்பந்தன் பிழைவிட்டுள்ளார். இதனைக் கூறியதற்காக என்னிடம் விசாரணையோ, விளக்கமோ கேட்கலாம் அது பிரச்சினையில்லை. நாம் பல இழப்புக்களைச் சந்தித்துவிட்டோம்.

### இனியும் கட்சிக் கதை கதைக்கமுடியாது

இனிமேலும் கட்சிக் கதை கதைத்துகொண்டிருக்க முடியாது. தமிழ் அரசுக் கட்சிதான் திறம். ஈ.பி.ஆர்.எல்.எப் தான் திறம், புளொட் தான் புடுங்கும், ரெலோ அதைவிட பண்ணும் என்று இனிமேலும் சொல்லத் தேவையில்லை. மக்கள் தெருவில் நிற்கின்றார்கள் அதனைக் கேட்பதற்கு யாருமில்லை.

### இருப்பதும் இல்லாதுபோகும்

தற்போது வடக்கு - கிழக்கு மக்கள் போரால் பெரும் பாதிப்புகளை சந்தித்துள்ளனர். அவர்களை நாம் இயல்பு நிலைக்கு அழைத்து வரவேண்டும்.

அவர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்தும் தகரக் கொட்டில்களில் இருக்க முடியாது. அதேபோல் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன.

அரசியல் தீர்வை மாத்திரம் நாம் பார்த்துக்கொண்டு இருப்போமானால் இருப்பதும் இல்லாமல் போய்விடும்.

எனவே கட்சி நலனை முன்னிறுத்தி யார் வந்தாலும் மக்களாகிய நீங்கள் அவர்களை நிராகரிக்க வேண்டும் அது நானாக இருந்தாலும் சரி. இதுவே இறந்த தோழர்களுக்கு அனைவரும் செய்யும் அஞ்சலியாக இருக்கும் -என்றார். (த-110)

# கொழும்பிலுள்ள தபால்கள் யாவும் வடக்குக்கு இன்று வந்துவிடும்

யாழ்ப்பாணம், ஜூலை 24

தபால் பணியாளர்களின் ஒருநாள் சுகவீனப் போராட்டம் நிறைவடைந்துள்ளது. வடக்கு மாகாணத்துக்குரிய தபால் பொதிகள் யாவும் கொழும்பிலிருந்து தபால் தொடருந்து மூலம் இன்று எடுத்து வரப்படவுள்ளது.

தபால் பணியாளர்கள் மேற்கொண்ட தொழிற்சங்கப் போராட்டத்தால் கொழும்பு தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வடக்கு மாகாணத்துக்கான ஒரு தொகுதி தபால் பொதிகளும் தேங்கியிருந்தன.

தேங்கிய தபால்பொதிகள் யாவும் இன்று காலை வந்து சேரும் என்று யாழ்ப்பாண தலைமைத் தபாலகம் தெரிவித்தது.

இந்தத் தபால் பொதிகள் வந்து சேர்ந்ததும் அவை உடனடியாகத் தரம் பிரிக்கப்பட்டு உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

இதேவேளை, தபால் பணியாளர்கள் மேற்கொண்ட ஒரு நாள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை அடுத்து நேற்று தபால் சேவைகள் யாவும் வழமைக்குத் திரும்பியுள்ளன. (த-17)

# பாடசாலைக்கு அருகில் மாட்டுப் பண்ணை

*சுகாதாரச் சீர்கேடுகளை எதிநோக்கும் மாணவர்கள்*

பருத்தித்துறை, ஜூலை 24

பாடசாலைக்கு அருகே காணப்படும் மாட்டுப் பண்ணையால் மாணவர்கள் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொள்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

வடமராட்சி, துன்னாலை கிழக்கில் உள்ள மாட்டுப் பண்ணையால் துன்னாலை தெற்கு அ.த.க பாடசாலை மாணவர்கள் சுகாதாரச் சீர்கேடுகளால் பாதிக்கப்படுகிறார்கள்.

இது தொடர்பில் சுகாதாரத் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி சபை ஆகியவற்றுக்கு கடந்த ஒரு வருடமாக முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை எனப்பெற்றோர்விசனம்தெரிவித்தனர். அத்துடன் அயலில் உள்ள துன்னாலை சிவன் ஆலயத்துக்குச் செல்லும் அடியார்களும் மாட்டுப் பண்ணையால் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வடமராட்சி பிரதேசத்தில் உள்ள சுகாதார திணைக்களத்தினருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "மாட்டுப்பண்ணையை அப்புறப்படுத்த நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து ஒரு வருடத்துக்கு மேலாக நிலுவையில் இருக்கிறது" எனத் தெரிவித்தனர். (ஐ -9)

## திருக்கேதீச்சர விவகாரத்துக்காக

# மாந்தை இந்து மக்கள் பேரவை யாழ். ஆயருக்கு நன்றி தெரிவிப்பு

மன்னார், ஜூலை 24

மன்னார் மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவை யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 12 ஆம் திகதி தெல்லிப்பளை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 11ஆம் ஆண்டு நினைவுந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதுதிருக்கேதீச்சர தோரண வளைவுபிணக்கு தொடர்பான உள்ளார்ந்த கருத்தை முன்வைத்தமைக்கு எமது பேரவை சார்பாகவும் மாந்தை மேற்கு இந்து சமூகம் சார்பாகவும் சிரம் தாழ்த்தி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எல்லோருக்கும் முன்மாதிரியாக மதத் தலைவரின் மகத்துவத்தை உணர்ந்து மதம் கூறும் விழுமியங்களைக் கடைப்பிடித்து தூய உள்ளத்துடன் உங்களின் உயர்வான கருத்தைப் பதிவு செய்தீர்கள்.

வரலாறுகள் எமக்கு பல பாடங்களைக் கற்றுதந்துள்ளன. கேதீச்சர ஆலயத்தின் வரலாறு தமிழ் இனத்தின் அடையாளம். ஆங்கிலேய ஆட்சிக் காலம் தொட்டு இன்று வரைவிட்டுக்கொடுப்புடன் நடந்து வருகின்றது.

தமிழ் இனத்தின் வரலாறு எதனுடன் தொடர்பு பட்டு தொன்மை மொழியாக, தொன்மை இனமாக உள்ளது என்பதை நீங்கள் அறியாதவரல்லர்.

எமது சாத்வீகமான நியாயமான கோரிக்கையை உணர்ந்த காரணத்தால் எமது நியாயத்தின் காரணத்தை வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

உங்களைப் போல் மன்னார் ஆயர் ஆண்டகை செயற்படுவார் என்று நம்புகின்றோம்.

கேதீச்சர வீதி அலங்கார வளைவு தொடர்பான தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்கு நன்றி தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (கு-56)



## முன்னாள் போராளிக்கு வியாபார நிலையம்

வடமராட்சி,ஜூலை 24

வற்றாப்பளை முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவருக்கு பல்பொருள் வியாபார நிலையம் ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

போரின்போது பல காயங்களுக்குள்ளாகி அன்றாட வாழ்வில் பல சிக்கல்களை எதிர்கொண்ட கலைக்கோன் என்ற போராளிக்கே இந்த உதவி வழங்கப்பட்டது.

புங்குடுதீவை பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட கோபி நர்மதா தம்பதிகளின் புதல்வன் ஹரிக்சனின் இரண்டாவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த உதவி அவர்களால் வழங்கப்பட்டது. (ஐ-26)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 24

யாழ்ப்பர்ணம் வடமராட்சி கிழக்கு மண்டலாய்ப்பிள்ளையார் ஆலய பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆலய முன்றலில் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலரும் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## தென்னை சார்ந்த கைத்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு சந்தை வாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 24

வடக்கு மாகாணத்தில் தென்னை சார்ந்த சிறு கைத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்ப்பாணப் பிராந்திய தென்னை பயிர்ச் செய்கை சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் தென்னை சார்ந்த சிறு கைத்தொழிலில் ஈடுபடுவபர்கள் பலர் உள்ளனர். தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல், விளக்கு மாறு செய்தல், சிரட்டையில் அலங்கார பொருள்கள் செய்தல் , போன்ற பல்வேறு சிறு கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கு நிலையான சந்தை வாய்ப்பு இன்மையால் அதிகரித்த உற்பத்தியை மேற்கொள்ள முடியவில்லை. இதனால் இவர்களின் வாழ்வாதாரம் சீரின்மை காணப்படுகிறது.

இவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல், அதற்கான தொடர்பாடல் மூலங்களை ஏற்படுத்தி கொடுக்கும் நோக்கில் சிறப்பான செயற்றிட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

தென்னை பயிர் செய்கை சபை மற்றும் தென்னை அபிவிருத்தி அதிகார சபை ஆகியன இணைந்து வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களை சந்தித்து அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

தற்போது கொழும்பு மற்றும் குருநாகல் பகுதிகளில் உற்பத்தி பொருள்களை சந்தைப் படுத்துவதற்கான தொடர்புகளை பயனாளிகளுக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே சிறுகைத்தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை நேர்தியாக செய்வதன் மூலம் தமது உற்பத்திகளை சந்தை படுத்தி கொள்ள முடியும்.

இந்த செயற் திட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிறைவுக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)



## தரம் 5 மாணவர்களுக்கு கருத்தரங்கு நடைபெற்றது

வவுனியா, ஜூலை 24

வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் கருத்தரங்கு கடந்த வாரம் நடைபெற்றது.

வெளிச்சம் அறக்கட்டளை மற்றும் பாடசாலை பழைய மாணவர் அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் தேசிய அபிவிருத்தி வங்கியின் நிதி பங்களிப்புடன் கருத்தரங்கு நடைபெற்றிருந்தது.

100க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர். விருந்தினர்களான கல்லூரியின் அதிபர் பி.சிவநாதன், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், NDB வங்கி முகாமையாளர், அலுவலர்க்ள் வவுனியா வடக்கு வலய ஆரம்ப பிரிவு விரிவுரையாளர் முரளிதரன், வெளிச்சம் அறக்கட்டளைத் தலைவர் லம்போதரன், செயலர் கார்த்திக், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் அபிவிருத்திக் குழு மற்றும் ஆசிரியர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (கு)





## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம், ஜூலை 24

யாழ்ப்பாணம் நீர்வேலி வடக்கு பன்னாலை சிவசக்தி முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை முன்பள்ளி முன்றலில் நடைபெற்றது.

சிவசக்தி சனசமூக நிலையத் தலைவர் கு.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார். ஆரம்ப நிகழ்வாக சிறார்களின் மேலைத்தேய வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது.

இறைவணக்கம், கொடியேற்றல், வரவேற்புரை, ஒலிம்பிக் தீபமேற்றல், சத்தியப்பிரமாணம் என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வு ஆரம்பமானது.

உடற்பயிற்சி, விளையாட்டுக்கள், விநோத உடை, என்பன இடம்பெற்று பரிசில் வழங்கலுடன் நிகழ்வு நிறைவுபெற்றது. (ஐ-159)

# எமது சபைக்குட்பட்ட விடயங்களில் பிற சபைகள் தலையிடவேண்டாம்

### நானாட்டானில் இப்படியொரு தீர்மானம்

மன்னார் பிரதேச சபைக்குரியஎல்லைநிர்வாகத்துக்குள் நானாட்டான் பிரதேச சபை மற்றும் மன்னார் நகர சபை போன்றன தலையிடுவதை வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருக்கேதீச்சர கோவில் வீதியில் அலங்கார வளைவு கட்டுவது தொடர்பாக மன்னார் நகர சபை நானாட்டான் பிரதேச சபை போன்றனதேவையில்லாமல்எமது சபை நிர்வாக எல்லைக்குள் நடக்கும் பிரச்சினைகளுக்குள் மூக்கை நுழைத்துத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துமாறு இரண்டு சபைகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி மன்னார் பிரதேச சபையின் 16ஆவது சபை அமர்வில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

21 சபை உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் சபைக்கு சமுகமளிக்கவில்லை. மிகுதி 20 உறுப்பினர்களைக் கொண்டு ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் முஜாகிர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னாரிலுள்ள அனைத்து மதங்களும் அனைத்து சமூகத்தினரும் ஒற்றுமையாகச் செயற்படுவதன் மூலமே அனைவரும் முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும். திருக்கேதீச்சரம் தமிழர்களின் தொன்மை கூறும் வரலாறு. அதை அனைவரும் அறிவார்கள். உடைக்கப்பட்ட வளைவை அந்த இடத்தில் நிறுவி மதங்களுக்குள் நல்லிணக்கத்தைக் கொண்டு வர மன்னார் பிரதேச சபையினர் அறிவு பூர்வமாகச் சிந்தித்து செயற்பட்டு வரும் நேரம், நானாட்டான் பிரதேச சபை திருக்கேதீச்சர வளைவு கட்டக்கூடாது என்று சபையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதே கருத்துக்களை தான் மன்னார் நகர சபைக்கும் கூற விரும்புகிறோம். எமது சபை பிரச்சினைகளை பார்க்கவும் நிர்வகிக்கவும் எமது உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மன்னார் பிரதேசசபையின்எல்லைக்குள் வேறு சபையினர் பாடம் எடுப்பதையும் கட்டளை பிறப்பிப்பதையும் நிறுத்த வேண்டும் எனவும் மன்னார்பிரதேசசபைத்தவிசாளர் முஜாஹிர் கேட்டுக் கொண்டார். (கு-213)

# பூஜித, ஹேமசிறி ஆகியோருக்கு எதிரான வழங்கு ஓகஸ்ட் 1இல்!

கொழும்பு, ஜூலை 24

கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுவை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டமைக்கு எதிராக சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க தவறியமைக்காக இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து குறித்த இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டமை, சட்ட விரோதமானது என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

சரியான புலனாய்வுத் தகவல்களை புறக்கணித்து இரண்டு சந்தேகநபர்களும் நூற்றுக் கணக்கான உயிர்களைக் காவுகொடுப்பதற்கு இடமளித்தமை கொலைக் குற்றச்சாட்டு என்று அந்த மீளாய்வு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## போலி நாணயங்கள் அச்சிடுவதை தடுப்பதற்கு புதியசட்டம் அவசியம்

### மத்திய வங்கி ஆளுநர் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 24

நாட்டில் நாணயத்தாள்கள் அச்சிடப்படுவதை தடுப்பதற்கு புதிய சட்டங்கள் மிக அவசியம் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கைவர்த்தகசம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த செயலமர்வுஒன்றில்நேற்றுக் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கென நாணய சட்டம் திருத்தியமைக்கப்படும் என்றும் நாட்டின் பொருளாதாரம் வரலாற்று ரீதியாக குறைத்து மதிப்பிடப்பட்டு வந்திருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ம)

## தொல்பொருள் திணைக்களத்தினரால் வரும் பிரச்சினைகளுக்கு என்ன தீர்வு?

### நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. கேள்வி

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பது எப்போது என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றில் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் கோவிலுடன் தொடர்புடைய ஈஸ்வரர் கோவில் அமையப்பெற்றிருந்ததான வாவெட்டி மலை, முல்லைத்தீவு மாவட்டத்திலே உயர்ந்த மலையாகக் கருதப்படுகின்றது. இந்தமலைப் பகுதிதொல்பொருள்திணைக்களத்தின் தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைகன்னியா வெந்நீரூற்று, முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோவில், தண்ணீர் முறிப்புக் குளத்துக்கு அருகாமையிலுள்ள குருந்தூர்மலை, நுவரெலியா கந்தப்பளை மாடசாமி கோவில் மற்றும் வவுனியா வெடுக்குநாரி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் போன்ற இடங்களிலும் தொல்பொருள் திணைக்களம் சார்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்ற பிரச்சினைகள் காரணமாக மத மற்றும் இனங்களுக்கிடையிலான முரண்பாட்டு நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டு வருகின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் இதுவரையில் தீர்வுகள் இல்லை. இத்தகைய பிரச்சினைகள் எமது மக்களுக்கு உணர்வு ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன - என்றுள்ளது. (த)

## புத்தளத்தில் கடல் அரிப்பு

புத்தளம், ஜூலை 24

புத்தளம் - முந்தல் பிரதேசத்திற்கு உட்பட்ட உடப்பு கிராமத்தில் கடலரிப்பு ஏற்படுவதால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

10 ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் வாழும் உடப்பு கிராமத்தில் அதிகளவானவர்கள் கடற்றொழிலை முதன்மைத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தக் கிராமத்திலுள்ள மீனவர்கள், கடற்கரையோரத்தில் தமது இயந்திரப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நாளுக்கு நாள் கடலரிப்பு ஏற்பட்டு வருவதால் தமது வீடுகள் கடலரிப்பினால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர். அத்துடன் தாங்கள் பயன்படுத்தும் வீதியும் அரிப்புக்கு உள்ளாகியுள்ளதாகவும் சிறிய பகுதியே எஞ்சி இருப்பதால் தமது இடத்தை பாதுகாத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

பல வருடங்களுக்கு முன்னர் கடற்கரையின் சில பகுதிகளில் கருங்கற்கள் போடப்பட்டுள்ள போதிலும் அவற்றினால் எவ்வித பயனும் இல்லை எனவும், ஏனைய பகுதிகளுக்கும் கருங்கற்களை போடும் பட்சத்திலேயே கடலரிப்பைத் தடுக்க முடியும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம)



## முஸ்லிம் விவாகம், மணமுறிவு தொடர்பில் முடிவெடுக்கக் குழு

கொழும்பு, ஜூலை 24

முஸ்லிம் விவாக மற்றும் மணமுறிவுச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக, நால்வரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு ஒரு வாரத்தில் தனது இறுதி அறிக்கையைத் தயாரிக்க இருப்பதாக அகில இலங்கை உலமா சபையின் பிரதிச் செயலர் மௌலவி எம்.எஸ்.எம்.தாஸிம் தெரிவித்தார்.

இந்தக் குழுவில், உலமா சபைத் தலைவர் அஷ்ஷேய்க் றிஸ்வி முப்தி, அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், பைஸர் முஸ்தபா ஆகியோர் அடங்குகின்றனர். முஸ்லிம் தனியார் விவாக மற்றும் மணமுறிவுச் சட்டம் தொடர்பில், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட குழுவொன்றை நியமித்ததோடு, இது தொடர்பில் இரு அறிக்கைகள் நீதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தன.

நீதியரசர் சலீம் மர்சூப் மற்றும் அரச தலைவர் சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஆகியோர் தலைமை, இருவேறு அறிக்கைகள் கையளிக்கப்பட்ட நிலையில், முஸ்லிம் தனியார் விவாக மற்றும் மணமுறிவுச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பில் நீண்டகாலமாக இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், பல்வேறு மட்டங்களில் இது தொடர்பாக ஆராயப்பட்டதோடு, இறுதியில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பான பொறுப்பு, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. குறைந்தபட்ச திருமண வயதை 18ஆக மட்டுப்படுத்துதல், திருமணப் பதிவில் மணப்பெண் கட்டாயமாகக் கையொப்பம் இடல் உள்ளிட்ட 11 விடயங்கள் தொடர்பில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையே ஏற்கனவே உடன்பாடு எட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பிலும் மாறுபட்ட கருத்துக்கள் எழுந்துள்ள நிலையில், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், உலமா சபை முக்கியஸ்தர்களுக்கும் இடையில் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியின் வீட்டில் முக்கிய சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

முஸ்லிம் தனியார் விவாக மற்றும் மணமுறிவுச் சட்டம் தொடர்பில், தற்போதைய நிலைமை குறித்தும் பாதகமின்றி இதனை கையாள்வது பற்றியும், இங்கு ஆராயப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்த இந்தச் சந்திப்பின் நிறைவில் சிறப்புக் குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு, இந்தக் குழுவின் அறிக்கை ஒரு வாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மீண்டும் உலமா சபையும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்து, அதன் இறுதி வரைபைத் தயாரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதில் எட்டப்படும் உடன்பாட்டின் பின்னர், அதன் இறுதி அறிக்கை நீதி அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் உலமா சபையின் பிரதிச் செயலாளர் மௌலவி தாஸிம் தெரிவித்தார். (ம)

## கழிவுப்பொருள் கொள்கலன் தொடர்பில் விசாரணைகள்!

கொழும்பு, ஜூலை 24

கழிவுப்பொருள்கள் அடங்கிய கொள்கலன் தொடர்பில் தொடர்ந்தும் சுங்கப்பிரிவு விசாரணை நடத்தி வருவதாக அதன் ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பயன்படுத்தப்பட்ட மெத்தை எனக்கூறி இந்த கழிவுப் பொருள்கள் நாட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தக் கொள்கலனை நாட்டிற்கு எடுத்துவர நடவடிக்கை எடுத்த தரப்புகளுக்கு எதிராக தராதரம் பார்க்காது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# அரச தலைவராக சமல் ராஜபக்ச தலைமை அமைச்சராக மகிந்த

### எடுத்த முடிவில் மாற்றம் இல்லை எனக் கூறி கோத்தாவுக்கு ஆப்பு வைக்கின்றார் வாசுதேவ

கொழும்பு, ஜூலை 24

சிறீலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக சமல் ராஜபக்ச இருக்க வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. அதேவேளை, தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

'முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரசியல்வாதியாக வரத் தயாராக இருந்தால், அவரைச் சூழ மக்கள் சக்தியொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தான் நாட்டின் தலைவராக வரத் தயார் என விடுத்துள்ள அறிவிப்பு அர்த்தமற்ற ஒன்று. இவ்வாறானவர்கள் மன்னர்களின் காலங்களிலும் காணப்பட்டுள்ளனர். 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி அரச தலைவருக்கு உள்ள நிறைவேற்று அதிகாரம் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளதுடன், தலைமை அமைச்சருக்கு அதிகாரம் அதிகரித்துள்ளது' எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)



# இது பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்கவேண்டும்

## பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை என்பது பௌத்த நாடு என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.



மெல்லங்வில பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டாலும், இது ஒரு பௌத்த நாடு என்பதை நாம் அனைவரும் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்குலக நாடுகளில் கிறிஸ்தவ மதம் அதிகமாக பின்பற்றப்படு வதாகக் கூறினாலும், அங்கு முழுமையாக கிறிஸ்தவக் கொள்கை பின்பற்றப்படுவதில்லை. உண்மையில், நாம் இப்படியான ஒரு நாட்டில் பிறந்ததையிட்டு பெருமைக் கொள்கிறோம். இங்கு அனைத்து மதங்களுக்கும் சுதந்திரம் காணப்படுகின்றது. அனைத்து கலாசாரங்களும் பின்பற்றப்படு கின்றன. இதுதான் அவசியமானதாகும். எனவே, முட்டாள் மனிதர்களின் கருத்துக்கு நாம் செவிமடுக்கவேண்டும்என்றஅவசியமில்லை. அதேபோல், கத்தோலிக்கர் எனக் கூறிக்கொள்ளும் ஒரு இராஜாங்க அமைச்சர், பௌத்த தேரர்கள் குறித்து அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பாக நாம் வெட்கப்படுகிறோம். நாம், இனிமேலாவது சிங்க ளவர் என்ற ரீதியில் ஒன்றுபட வேண்டும் என்று இவ்வேளையில் கேட்டுக்கொள்கிறேன்' - என்றார். (ம)

## பெலியத்தை பிரதேச சபை தலைவர் கைது

கொழும்பு, ஜூலை 24

பெலியத்தை பிரதேச சபையின் தலைவர் சிறில் முனசிங்க பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் அவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## இரட்டையர்களின் இறுதிக்கிரியை ஞாயிறன்று

கொழும்பு, ஜூலை 24

அக்கரப்பத்தனை டொறிங்டன் அலுப்பு வத்தை தோட்டத்தில் நீரோடை ஒன்றில் வீழ்ந்து அடித்துச் செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்த இரட்டைச்சகோதரிகளின் இறுதிச் சடங்குகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன.

குறித்த மாணவிகளில் ஒருவர் கடந்த 18ஆம் திகதி மாலை சடலமாக மீட்கப்பட்ட நிலையில், மற்றைய சிறுமி மறுநாள் சடலமாக மீட்கப்பட்டார். அவர்களின் இறுதிக் கிரியைகளே ஞாயிறன்று இடம்பெற்றன. (ம)



## இன்றுடன் காற்று வலுவிழக்கும்

கொழும்பு, ஜூலை 24

நாட்டிலும் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளிலும் தற்போது காணப்படும் கடும் காற்றுடன் கூடிய நிலை இன்றிலிருந்து குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் நேற்றுக் காலை வெளியிட்டுள்ள வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மேல், தென், மத்திய, சப்ரகமுவ, மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் தற்போது காணப்படும் கடும் காற்றுடன் கூடிய நிலை ஜூலை 24ஆம் திகதியிலிருந்து குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது மேற்கு முதல் தென்மேற்கு வரையான திசைகளிலிருந்து வீசக்கூடும்.

புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

இக் கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60-70 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசக்கூடுவதுடன் அவ்வேளைகளில் கடல் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறீர்கள் - என்றுள்ளது. (ம-7)

## சிறுபான்மையினரை அரவணைக்கும் வேட்பாளருக்கே எமது கட்சி ஆதரவு

### அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

விரைவில் நடக்கவிருக்கின்ற அரச தலைவர் தேர்தலில் சிறுபான்மைச் சமூகத்தை அரவணைக்கும் ஒருவருக்கே எமது கட்சி ஆதரவளிக்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய அப்துல்லா மகரூப் தெரிவித்தார்.

கந்தளாயில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற கட்சி முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்தவின் ஆட்சியில் சிறுபான்மை மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்தார்கள். சர்வாதிகார ஆட்சியை நடத்தி சிறுபான்மை மக்களை துன்புறுத்தினார்கள். மலையக மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. இதனால்தான் சிறுபான்மை மக்கள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தனர். தமது பாதுகாப்பை உறுதிசெய்துகொள்ள சிறுபான்மை மக்கள் ஓரணியில் ஒன்றுதிரண்டு நிற்க வேண்டும். ஆதலால் இன நல்லுறவை வலுப்படுத்தக்கூடிய வேட்பாளர் ஒருவரையே நாம் ஆதரிப்போம் - என்றார். (ம)

## இலங்கைக்குப் புதிய புவியியல் வரைபடம்

கொழும்பு, ஜூலை 24

சீனாவின் முதலீட்டில் உருவாக்கப்படும், துறைமுக நகர நிலப்பரப்பை உள்ளடக்கி இலங்கையின் புதிய புவியியல் வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

கடைசியாக இலங்கையின் வரைபடம், 1995ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இந்த நிலையில் புதிய வரைபடம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளதாக, அளவையாளர் நாயகம் பி.சங்கர தெரிவித்துள்ளார். இந்தப் புதிய வரைபடத்தில், கொழும்பு துறைமுக நகரம், அம்பாந்தோட்டை துறைமுகம், நெடுஞ்சாலைகள், மொறகஹகந்த நீர்த் தேக்கம் உள்ளிட்டவை புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இந்தவரைபட தயாரிப்பு பணி மார்ச் மாதம் நிறைவு செய்யப்பட்டது தற்போது அதனை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும். இந்த புதியவரைபடத்தில், துறைமுக நகரம் உள்ளிட்ட 25 ஆண்டுகளில் இடம்பெற்ற அனைத்து மாற்றங்களும் உங்வாங்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் இருந்து வரை படத்தை புதுப்பிக்கும் பணிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் என்று முன்னதாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



## கிழக்கில் அரசியல் செய்வது தம் நோக்கமல்ல என்கிறார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூலை, 24

கூட்டமைப்பு சரியான பாதையில் பயணிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்காகவே கிழக்குக்குப் பயணம் செய்கின்றோமே தவிர வாக்குகளைச் சிதைப்பதற்காக அல்ல. வடக்கிலே உறுதியானநிலையில்எமது கட்சி காலூன்றாத நிலையில், கிழக்கில் அரசியல் செய்வது நமது நோக்கமல்ல.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலர் நாயகமுமான திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

கல்முனையில் கடந்த சனிக்கிழமை ஊடக சந்திப்பொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண அரசியல் தலைமைகள் ஏன் அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தைக் குறி வைத்துச் செயல்படுகின்றனர்? என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது அனந்தி மேலும் தெரிவித்ததாவது:


கூட்டமைப்பின் தலைமை உள்ள கிழக்கு மாகாணத்தில் பல இடங்கள் பறிபோயுள்ளன. இவற்றைக்கூட கூட்டமைப்பு சரிவரச் செய்யவில்லை. இதன்நிமித்தமே நாங்கள் வடக்கு- கிழக்கு என்று பாராமல் தமிழர்கள் என்ற நோக்கிலே குரல் கொடுப்பதற்காக வருகின்றோம். கிழக்கிலுள்ள மக்கள் தங்களுக்கான சரியான தலைமைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். நாங்கள் ஒரு போதும் வடக்கிலிருந்து வந்து கிழக்கிலே தேர்தலில் இறங்கப் போவதில்லை. வடக்கில் நிலைமை வேறு கிழக்கின் நிலைமை வேறு. காலத்துக்குக் காலம் பல்வேறுப... நெருக்கடிகளை கிழக்கு மக்கள் அனுபவித்து வரு...றார்கள். எனது கணவ... திருகோணமலை அரசியல்த்துறைப் பொறுப்பாளராக இருந்தார். அதனால் எனக்கும் கிழக்குக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது. யாருக்கும் அஞ்சி வடக்கு வேறு கிழக்கு வேறு என வேறு...டுத்த தயாரில்லை - என்றார். (கு-21)

## ஈரான் அதிரடி!

# அமெ. உளவாளிகளுக்கு சாவுத்தண்டனை

தெஹ்ரான்,ஜூலை 24

அமெரிக்காவின்உளவுஅமைப்புக்காக (சி.ஐ.ஏ.) பணிபுரிந்த 17 உளவாளிகளைக் கைது செய்துள்ளதாகவும், அதில் சிலருக்குச் சாவுத் தண்டனைஅளித்ததாகவும்ஈரான்கூறுகிறது.




சந்தேகத்துக்குரிய அந்த நபர்கள் ஈரானின் அணு, இராணுவம் மற்றும் பிற துறைகள் சார்ந்த விடயத்தில் உளவு பார்த்துத் தகவல்களைத் திரட்டியதாக ஈரானின்உளவுஅமைச்சகம்கூறியது. இந்த17பேரும்ஈரானின்முக்கியதுறைகள் குறித்துத் தகவல் திரட்டியதாக ஈரான்உயர்அதிகாரிஒருவர்கூறுகிறார். ஆனால், கைது செய்யப்பட்ட இந்த 17 பேரில்எத்தனைபேருக்குச்சாவுத்தண்டனை வழங்கப்பட்டது. எப்போது வழங்கப்பட்டது எனக் கூறவில்லை. அமெரிக்காவுக்காக இவர்கள் உளவு பார்த்தது குறித்து ஓர் ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளதாக ஈரானின் உளவுத்துறைஅமைச்சர்மஹ்மூத்அலாவி தெரிவித்தார். அந்தஆவணப்படத்தின் முன்னோட்டக் காட்சியையும் அவர் வெளியிட்டார்.

சில உளாவாளிகள் அமெரிக்காவின் நுழைவிசைவுவலையில்சிக்கிஇந்தப் பணியில் ஈடுப்பட்டுள்ளனர். அதாவது அமெரிக்காவுக்குச் செல்ல விரும்பும் ஈரான் மக்களுக்கு நுழைவிசைவு அளிப்பதாகக்கூறிஅவர்களைஉளவுக்காகஅமெரிக்காபயன்படுத்திஉள்ளது என்றார் மஹமூத். ஈரானின் இந்தத் தண்டனை விவகாரம் வெளியாகிய பின்னர் இதுகுறித்துக் கருத்துரைத்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப், 'ஈரானுடன் ஏதாவது ஒப்பந்தத்தை எட்டுவதற்கு இது போன்ற விடயங்கள் தடையாக இருக்கின்றன என்றார். அத்தோடு ட்ரம்ப், ஈரானின் மேற்படிக் கூற்றை மறுத்தார். அவை அனைத்தும் பொய் என்று கூறினார்.

## பிரிட்டனின் தலைமையில் தனிப்படை!

லண்டன், ஜூலை 24


வளைகுடாவில்பயணிக்கும் எண்ணெய்க் கப்பல்களின் பாதுகாப்பைஉறுதிப்படுத்துவதற்காகப் பிரிட்ட னின் தலைமையில் கூட்டுப் படையைஉருவாக்கஉள்ளதாகத் தெரிவித்தார் பிரிட்டனின் அயலுறவுச் செயலர் ஜெர்மிஹன்ட். பிரிட்ட னுக்குச் சொந்தமான ஸ்டெனா இம்பரோ என்றஎண்ணெய்க் கப்பலை ஈரான் கைப்பற்றியதுகடற்கொள்ளைஎனவும் அவர் குறிப்பிட்டார். இதுகுறித்துஜெர்மிஹன்ட்மேலும் கூறுகையில்,

''நாங்கள் ஈரானுடன் போருக்கு ஆயத்தமாகவில்லை. சட்டபூர்வமான ஆவணங்களுடன்பன்னாட்டுக் கடற்பரப்பில் பயணித்த எங்கள் எண்ணெய்க் கப்பலை ஈரான் கைப்பற்றியது தவறானது. நாங்கள் பல நாடுகளுடன் வளைகுடாவின் பாதுகாப்புத் தொடர்பான பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். ஆனால், அமெரிக்காவுடன் கூட்டுச் சேர விரும்பவில்லை. காரணம்அமெரிக்கா2015ஆம் ஆண்டில் அணு ஆயுத ஒப்பந்தத்தில் இருந்து விலகி ஈரான்மீதுதடைகளைவிதித்தது. இப்போது அந்தத் தடையை நீக்குவதற்கு அணுஆயுதவிவகாரத்தைக் கையில் எடுத்துள்ளது. ஈரான் மீதான பொருளாதாரத் தடையை அதிகரிப்பதல்ல எங்கள் நோக்கம். ஆகவே நாங்கள் எங்களுடைய கூட்டுப்படையில் அமெரிக்காவை இணைத்துக் கொள்ள விரும்பவில்லை - என்றார்.

## காஷ்மீர் விவகாரத்தில் நடுவராக அமெரிக்கா?

### இந்தியா மறுப்பு இம்ரான்கான் விருப்பு





புதுடெல்லி, ஜூலை24

இந்தியா-பாகிஸ்தான் இடையேயுள்ளகாஷ்மீர் நிலப்பரப்பு விவகாரத்தில் மத்தியஸ்தம் வகிக்குமாறுஇவ்விருநாடுகளின்தலைமை அமைச்சர்களானநரேந்திரமோடி, இம்ரான்கான் ஆகியோர் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிடம் கோரினர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் 3 நாள்கள் பயணமாக அமெரிக்காசென்றுள்ளார். அங்குஅவர் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பைச் சந்தித்துப் பேசினார். ட்ரம்ப் உடனானசந்திப்புக்குப்பின், இம்ரான்கான், ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கும் போது, 'காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவும், பாகிஸ்தானும்அமைதிப்பேச்சுமூலம் தீர்வுகாண்பதுசாத்தியமில்லை. முன்னாள் அதிபர் முஷாரப், முன்னாள் தலைமை அமைச்சர் வாஜ்பாய் ஆகியோர் இருந்த போது, காஷ்மீர்விவகாரத்தில்தீர்வுகாணும் முடிவில் முன்னேற்றம் தென்பட்டது. ஆனால், அதன்பின், இரு நாடுகளுக்கும் இடையே உறவில் விரிசல் ஏற்பட்டது. இந்த விடயத்தில் இந்தியா முன்னோக்கி வர வேண்டும். காஷ்மீர்விவகாரத்தில்மத்தியஸ்தம் செய்வதில் ட்ரம்ப் நிச்சயம் முக்கிய பங்கு வகிப்பார் என்றார். அத்தோடு இதுகுறித்து ட்ரம்ப் தெரிவிக்கையில், ஜப்பானில் நடந்த ஜி20மாநாட்டின்போது, இந்தியத்தலைமை அமைச்சர்மோடியிடம்பேசினேன். காஷ்மீர் விவகாரத்தில் நான் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்என அவர்என்னிடம்கோரிக்கை விடுத்தார்' என்றார்.

**இம்ரான்கானின் விருப்பு**

இந்தப் பூமியில் உள்ள130 கோடி மக்களுக்காக நான் பேசுகிறேன். காஷ்மீர் விவகாரத்தில் ஏதேனும் சுமுகமான தீர்வு ஏற்பட்டு அமைதி கிடைத்தால், அதன் பலன்களை எண்ணிப்பாருங்கள். 130 கோடி மக்களின் பிரார்த்தனைக்குப் பலன் கிடைக்கும். இந்தியா அணு ஆயுதங்களைக் கைவிட்டால், பாகிஸ்தானும் கைவிடும். ஏனென்றால், இரண்டுநாடுகளிடமும்அணுஆயுதம்இருப்பதால், அணு ஆயுதப் போர் என்பதை ஒரு வாய்ப்பாக வைத்திருப்பார்கள். இரண்டு நாடுகளுக்குஇடையேயானஎல்லைஎன்பது 2ஆயிரத்து500மைல்மட்டுமே. அணுஆயுதப்போர்என்பதுசுயஅழிவுக்குத்தான்இட்டுச் செல்லும். அது தீர்வாகாது. கடந்த 70 ஆண்டுகளாக இந்தியாவும், பாகிஸ்தானும் அண்டைநாடுகளாகஇருந்தபோதிலும்கூட, நாகரிகமான, பண்பட்ட நட்பு நாடுகளாக வாழமுடியவில்லை. இதற்கு முக்கிய காரணம், ஒரே காரணம், காஷ்மீர் விவகாரம் மட்டும்தான். அமெரிக்கா தலையிட்டு இந்தியாவுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றார்.

**இந்தியத் தரப்பு மறுப்பு**

காஷ்மீர் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்குமாறுஇந்தியத்தலைமைஅமைச்சர்மோடி தன்னிடம் உதவி கோரியதாக ட்ரம்ப் தெரிவித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவித்தது இந்திய அயலுறவுத்துறை அமைச்சு. மோடி, ஒருபோதும் காஷ்மீர் விவகாரத்தில் அதிபர் ட்ரம்ப்பை மத்தியஸ்தம் செய்யக் கேட்கவில்லை. எல்லை கடந்த தீவிரவாதத்தைப் பாகிஸ்தான் நிறுத்தும் வரை பேச்சுக்கு இடமில்லை' என அது மேலும் தெரிவித்தது.



## இன்றைய நாள்

**மேடம்:** தாயின் ஆசியால் உற்சாகமுடன் செயல்படுவீர்கள். தாமதமான செயல்கள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். அதிக பணவரவால் சேமிப்பு கூடும்.

**இடபம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வியத்தகு அளவில் நன்மை கிடைக்கும். தொழில் வளம் சிறந்து வாழ்க்கைத்தரம் மேம்படும். வருமானம் கூடும். கூடுதல் சொத்து வாங்க அனுகூலம் உண்டு.

**மிதுனம்:** பகைவரிடம்விலகியிருப்பது நல்லது. முக்கியமான பணிகளை நிறைவேற்ற மாற்றுவழியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும்.

**கடகம்:** நண்பரின் செயலை குறை சொல்லவேண்டாம். அதிகஉழைப்பால் தொழில் வியாபார நடைமுறையை சீர்படுத்துவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். உணவுப்பொருள் தரமறிந்து உண்ணவும்.

**சிம்மம்:** இளமைக் கால நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். மனதில் புத்துணர்வு பிறக்கும். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல்பணி செய்வீர்கள்.

**கன்னி:** வெகுநாள் திட்டமிட்ட பணி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான உதவி கிடைக்கும்.தாராள பணவரவு வந்து சேரும். பணியாளர்களுக்கு கூடுதல் சலுகை கிடைக்கும்.

**துலாம்:** செயல் நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். தொழிலில் இருக்கிற அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை.

**விருச்சிகம்:** கவனக்குறைவால் மனதில் பதற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலங்களை பாதுகாக்கவும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுக்கு பயன்படும்.

**தனுசு:** நண்பரின் ஆலோசனையால் நன்மை உண்டாகும். திகைப்புதந்தபணி எளிதில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க வாய்ப்பு கிடைக்கும். நிலுவைப்பணம்வசூலாகும்.

**மகரம்:** யாரிடமும் பொது விஷயம் பேச வேண்டாம். உடல்நலத்தில் தகுந்த கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். ஆடம்பரமாக செலவழிப்பதை தவிர்க்கவும்.

**கும்பம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். குடும்பத்தினரின் தேவைகளை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நற்பெயருக்கு குறை வராமல் செயல்படவும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். தவிர்க்க இயலாத வகையில் திடீர்ச் செலவு ஏற்படலாம்.

உதயன்
@UthayanPrint
# புதன் பொய்கை
ஜுலை 24, 2019

இராமபுரத்தூர் நிஷாந்தன்

# கற்பனையும், வர்ணிப்பும் இழையோடும் இலக்கியப் பாடல்கள்

இலக்கியம் என்பது இதயத்தின் இதமான தேடல், இன்பம் தரும் இனிய தேன் கூடு, இரசனை ஊட்டும் அமுத கலசம், காயம் பட்ட மனதினை வருடிடும் அரு மருந்து, அன்பினை போதிக்கும் அட்சய பாத்திரம், அடடா, இப்படி இலக்கியம் குறித்த சொல்லாடல் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம். இரசிக்கத் தக்க மனம் படைத்த யாவரும் இதை இலகுவில் புரிந்து கொள்வர்.

நம் இலக்கியங்கள் எல்லாம் படித்து இன்புறுவ தற்கு துணையாகின்றன. ஒவ்வொரு இலக்கியப் பாடல்களிலும் பாடப்பட்டுள்ள கற்பனை வளம், வர்ணிப்பின் இயல்பு, அணிகளின் பயில்பு, சொல்லாட்சியின் ஆளுமை முதலிய அம்சங் கள் இலக்கிய ஆர்வலர்களின் உள்ளத்தில் நிறைந்திருக்கச் செய்கின்றன. இப்போது நாம் நம் இலக்கியப் பாடல்களில் நம் கற்பனைக்கு எட்டாத வகையில் அதீத கற்பனையும், உயரிய வர்ணிப்பும், ஆழமான இலக்கிய நயத்தலும் கொண்டு படைக்கப்பட்டுள்ள சில பாடல் களைக் காண்போம் வாருங்கள்.



### பறந்தது வண்டோ அல்லது பழமோ?

தேனை அருந்தும் இயல்புடைய வண்டு ஒன்று நன்றாக தேனை அருந்தி விட்டு மயங் கிக் கிடக்கின்றது. அப்போது பார்ப்பதற்கு அது நாவல் பழம் போல் காட்சியளிக்கின்றது. அச் சமயம் அவ் வழியில் ஓர் அழகு படைத்த பெண் ஒருத்தி வருகின்றாள். மயங்கிக் கிடந்த வண்டினை உண்மையில் நாவல் பழம் எனக் கருதி தன் நீண்ட மலர் போன்ற கரங்க ளில் எடுத்து முகத்தின் முன் வைத்துப் பார்த் தாள். அப்போது கொஞ்சம் மயக்கம் நீங்கிய வண்டு கண்களை விழித்துப் பார்க்கின்றது. அதற்கு ஆச்சரியமாயிற்று, வானத்தில் நிலா தோன்றி விட்டது, அப்படியெனில் தான் இருக் கும் தாமரை மலரானது குவிந்துவிடும். இத னால் அதற்குள் அகப்பட்டுத் தான் இறந்து விடுவேன் என அச்சப்பட்டு அவ் வண்டு பறந்து போனது. இதைக் கண்ட அந்தப் பெண்ணிற்கோ ஆச்சரியம். இது என்ன புது மையாக உள்ளது, பறந்தது வண்டோ? அல் லது பழம் தானே? என வியப்புடன் கூறி நிற் கின்றாள். பாடல் இது தான்.

*தேன் நுகர் வண்டு மது தனை உண்டு*
*தி(ம)யங்கியே கிடந்ததைக் கண்டு*
*தான் அதைச் சம்புவின் கனி என்*
*தடங்கையில் எடுத்து முன் பார்த்தாள்*
*வான் உறு மதியம் வந்தது என்று எண்ணி*
*மலர்க் கரம் குவியும் என்று அஞ்சி*
*போனது வண்டோ பறந்ததோ பழம் தான்*
*புதுமையோ இது எனப் புகன்றாள்*

ஆகா, என்னவொரு கற்பனையான வர்ணிப்பு. தேனை அருந்தி மயங்கிக் கிடந்த வண்டினை நாவல் பழம் என் கின்றார் கவிஞர்.

இது தவிர பெண்ணின் முகத்தை சந்திரன் என்று வண்டு எண்ணியதும், தான் இருக்கின்ற பெண்ணின் கைகளை தாமரை மலர் எனக் கருதியதும் பின் வானில் சந்திரன் வந்துவிட்டால் தாமரை மலர் குவிந்து கொள் ளும் என்பதை அறிந்த வண்டு, தன் முன் உள்ள பெண் ணின் முகத்தை சந்திரன் எனக் கருதி, தான் இருக்கும் பெண்ணின் கரங்கள் தாமரை மலர் என எண்ணி அந்த தாமரை மலர் குவிந்து கொண்டால் தான் அதற்குள் அகப்பட்டு இறந்து விடுவேன் என அச்சம் கொண்டு பறந்து சென்றது என அழகிய கருத்தாடல் காட்டுகின்றது. விவேகசிந்தாமணியில் உள்ள இப் பாடல். ஆகா, அரு மையான கற்பனையாற்றல். மீண்டுமொரு தடவை பாடலை படித்துப் பாருங்கள்.



### நிலவா? அல்லது தோகை மயிலா?

இதுவும் விவேகசிந்தாமணி இலக்கியம் தந்த பாடலே. மிகவும் உயர்ந்த அரண்மனை மேல் மாடம் ஒன்றில் அழகிய பெண் ஒருத்தி உலாவுகின்றாள். அவளது அழ கிய முகத்தைக் கண்ட இராகு எனும் பாம்பு முழுநிலவு என்று எண்ணி அந்தப் பெண்ணை நெருங்கி வந்தது. அப்போது அதைக் கண்ணுற்ற பாகினைப் போன்ற மொழிகளைப் பேசுகின்ற அந்த மங்கை அச்சப்பட்டு ஓடிச் சென்றாள். இதைக் கண்ட இராகு தோகை மயில் ஓடிச் செல்கின்றது என எண்ணி திரும்பிச் சென்றதாம். அந்த நயமான பாடல் இதுதான்.

மாகமாமேடை மீதில் மங்கை நின்று உலாவக் கண்டு
ஏகமா மதி என்று எண்ணி இராகு வந்துற்ற போது
பாகு சேர் மொழியினாளும் பற்றியே பாதம் வாங்க
தோகை மா மயில் என்று எண்ணித் தொடந்து அரா
மீண்டதன்றே

படிக்கும் போது நயமூட்டும் பாடலல்லவா? மங்கையின் முகத்தை நிலவெனவும், அவ ளது உடல் வனப்பினை அதாவது சாயலை மயில் எனவும் கூறி வர்ணிப்பினை ஊட்டி யுள்ள கவிஞரின் நயம் வியக்கத்தக்கதே.

### பூவையின் முகம் தாமரை

நளவெண்பாவில் புகழேந்திப் புலவர் காட்டும் பாடல் இது. நளனும், தமயந்தியும் திருமணம் முடித்து வீதியுலா செல்கின்றனர்;. அப்போது நளன் செல்லும் வழியில் புலப்படும் இயற் கைக் காட்சிகளையெல்லாம் காண்பித்தவாறு செல்கின்றான். அப்போது ஒரு மலர்ச் சோலை யில் ஓர் அழகிய பெண் ஒருத்தி மலர்களைப் பறிக்கின்றாள். அப்போது அழகிய அவளது முகத்தை தாமரை என்று எண்ணிக் கொண்டு தேன் குடிக்கும் ஆவலில் வண்டு கள் எல்லாம் மொய்க்க வருகின்றன. இதைக் கண்டு அப்பெண் தன் கைகள் கொண்டு வண் டுகளைத் தடுக்கின்றாள். அப்போதும் அந்த வண்டுகள் போகாமல் அவள் கைகளையும் காந்தள் மலர்கள் எனக் கருதி அவளது கைக ளையும் மொய்க்க முற்படுவதைக் கண்டு அப்பெண் அச்சத்தால் நடுங்கி நிற்கின்ற காட் சியைக் காணும்படி நளன் தமயந்திக்கு காண் பிக்கின்றான்.

மங்கை ஒருத்தி மலர்க் கொய்வான் வான் முகத்தை
பங்கயம் என்று எண்ணி படி வண்டை செங்கையால்
காத்தாளக் கைம் மலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேத்தாளைக் காண் என்றால் வேத்து

ஆகா, மலர்களில் தேன் பருகும் இயல்புடையன வண் டுகள். ஆகவேதான் பெண்ணின் முகத்தை தாமரை மலர் எனக் கருதி அதில் தேன் குடிக்கும் ஆவலில் அவை அவளது முகத்தை மொய்க்க முற்பட்ட னவாம். ஆக அப் பெண்ணின் முகத்தை தாமரைபோல மென்மையும், அழகும் கொண்டது என்பதும், அந்தப் பெண்ணின் கைகளை காந்தல் மலர்கள் எனக் கருதி மேலும் வண் டுகள் அவள் கைகளையும் மொய்க்க முற்பட்டன என்ப தனால் அவள் கைகள் காந்தள் மலர் போல் மென்மை உடையது எனவும் கவிஞர் வர்ணிப்பில் உச்சம் தொடு கின்றார்.

### சேற்றில் வழுக்கி விழுந்த யானைகள்

நளன் எனும் நல்லரசன் ஆட்சி செய்யும் நாடு நிடத நாடு. அந்த நாடு மன்னவன் ஆட்சியில் குறையொன்றும் இல்லாது நிறைவு பெற்றிருந்தது. அந்த நாட்டில் வாழும் பெண்கள் எல்லோரும் பேரழகு படைத்தவர்கள். அத்தகு பெண்கள் நீர் நிலை ஒன்றில் நீராடி விட்டு உடைகளை மாற்றிக் கொண்டு வீதியால் நடந்து செல்கின்றனர். அப் போது அவர்களின் கூந்தலில் இருந்து துளித் துளியாக சொட்டிய நீர்த் துளிகள் நிலத்தில் சிந்துகின்றன. அவ்வாறு சிந்திய நீர்த் துளிகள் மணலோடு சேர்ந்ததினால் சேறாகி விடுகின்றதாம். அவ்வேளை அந்த வழியால் நடந்து வந்த கரிய யானைகள் அந்த சேற்றில் வழுக்கித்தொப், தொப்பென்று கீழே விழுந்தனவாம்.



பாடலை பாருங்கள்.

கோகை மடவார் தம் கொங்கை மிசைத் திமிர்ந்த
சீதக் களபச் செழுஞ் சேற்றால் வீதி வாய்
மானக் கரி வழுக்கும் மாவிந்தம் என்று உளதோர்
ஞானக் கலை வாழ் நகர்

என்ன, அழகிய பாடல் தானே. பெண்களின் கூந்தலில் இருந்து நீர்த் துளிகள் சிந்துவது இயல்பே. ஆனால் அந்த நீர்த் துளிகள் சிந்திய தால் வீதியானது சேறாக மாறியது என்பதும், அந்தச் சேற்றில் வழுக்கி யானைகள் விழுந்தன என்பதும் எம் கற்பனைக்கு எட்டாத ஓர் உயரிய வர்ணிப்பேயாகும். ஆறுமுகத்தானுக்குரிய பெருமைகள் இவை.

காளமேகப் புலவரின் பாடல்கள் பல்சுவையும், எள்ளல் சுவையும், சிலேடைத் தன்மையும் நிறைந்ததாக விளங்குவன. அவரது பல்சுவைப் பாடல்களில் என் மனம் கவர்ந்த பாடல் இது. ஒருமுறை காளமேகப் புலவர் தான் சென்ற ஊரில் திருவீதியுலா வரும் முருகப் பெருமானின் பெருமைகள் என அவனது உறவினர்களை குறித்து கொஞ்சம் எள்ளல் சுவையுடன் பாடல் ஒன்றைப் பாடினார்.

அப்பன் இரந்து உண்ணி, ஆத்தாள் மலை நீலி
ஒப்பரிய மாமன் ஊறி திருடி – சப்பைக்கால்
அண்ணன் பெரு வயிறன் ஆறுமுகத்தானுக்கு
இங்கு எண்ணும் பெருமை இவை.

என்ன ஒன்றுமே புரியலயா? இந்தப் பாடலில் பொருள் இது தான். முருகனின் தந்தை பிச்சை எடுத்து உண்பவன் ஆகவே தான் முருகனின் தந்தையை இரந்து உண்ணி என்றார் காளமேகனார். அடுத்து முருகனின் தாய், மலை மகளாக பிறந்த கோபக்காரி ஆகவே தான் அவள் மலை நீலி. அடுத்து முருகனின் மாமனை உறி திருடி என்றார். முருகனின் மாமன் திருமால். அந்தத் திருமாலே கண்ணனாக உறியில் வெண்ணெய் திருடி உண்டவன். அடுத்து முருகனின் அண்ணன் பிள்ளையார். பானை வயிற்றினை உடையவன். அத்தோடு சப்பைக் கால்களை உடையவன் எனவாறு ஒரு போடு போட்டார் காளமேகப் புலவர்.

படிக்கும் போது கொஞ்சம் கிண்டலாக இருந்தாலும் பாடலை கருத்தூன்றிப் படிக்கும் போது அது பின்வருமாறு பொருள் தரும்.

அதாவது, பக்தர்களிடம் உள்ள தீய குணங்களை சிவன் தன் திருவோட்டில் பிச்சையாக ஏற்கிறார். தீமையை எதிர்க்கும் போது பார்வதி கொடிய நீலியாக கோபம் கொள்கிறாள். வெண்ணெய் திருடுவது போல நல்லவர் உள்ளத்தை கொள்ளை கொள்பவராக திருமால் இருக்கிறார். அண்டங்களை வயிற்றில் தாங்கி நிற்பதால் விநாயகர் பெருவயிறு கொண்டவராக விளங்குகிறார். ஒரு பாடலில் எள்ளல் சுவையும், வர்ணிப்பும் கலந்ததாக கவித்துவம் புரிவதில் காளமேகப் புலவரை மிச்சியவர் யாருமில்லை என்பேன்.

**வஞ்ச மகள் வந்தாள்**

கம்பரின் பாடல்கள் என்றாலே கவிநயமும், கற்பனை வளமும் நிறைந்திருக்குமே, அத்தகு பாடல்களில் ஒன்றே இந்தப் பாடலும். இராமனை அடைய வேண்டும் எனும் விருப்பத்தில் இராவணன் தங்கையான சூர்ப்பணகை தன் அசுரக் கோலம் மறைத்து அழகிய மானிடப் பெண்ணின் தோற்றம் தரித்து இராமனை நோக்கி நடந்து வருகின்றாள். எப்படி நடந்து வருகின்றாள், அவள் நடையழகை காட்டுகின்றார் கம்பர் பாருங்கள்.

பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,
செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,
அம் சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்

அவளது பாதம் அது, பஞ்சு போன்று மென்மையானது. எந்த அளவுக்கு மென்மையானது தெரியுமா? கொடியின் தளிர் அவள் பாதத்தைப் பார்த்தால் வருத்தப்படுமாம். இன்னும் சொல்கிறார் கம்பர். செக்கச் சிவந்த தாமரை மலர் போன்று இருக்கிறதாம் அவள் பாதம். அப்படிப் பட்ட பாதங்களால் அடியெடுத்து வைத்து நடந்து வருகிறாள். எப்படி நடக்கிறாள்? சீராக அடி வைத்து, மெல்லமெல்ல அடிவைத்து, மயில் போல, அன்னம்போல நடக்கிறாள். அப்படி அவள் நடக்கும் போது, மின்னுகின்ற வஞ்சிக் கொடிபோல அழகாக் காட்சியளிக்கிறாள். இப்படியெல்லாம் அழகாக நடந்து வரும் அவள் எப்படிப் பட்டவள் தெரியுமா? கம்பர் சொல்கிறார். முழுக்க முழுக்க நஞ்சு (விஷம்) ஆனவள். மனம் முழுக்க வஞ்சனையுடையவள். ஆகவே தான் வஞ்சமகள் வந்தாள் என்றார் கம்பர். இன்னொரு தடவை பாடலை படித்துப் பாருங்கள். .





# விருது பெறும் வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா

லதா கந்தையா கிளிநொச்சியைச் சேர்ந்தவர். லதா கந்தையா என்ற இயற்பெயரை கொண்டிருந்தாலும் வன்னிமகள், எஸ்.கே.சஞ்சிகா, தாரணி, துர்க்கா ஆகிய புனைபெயர்களில் தனது ஆக்கங்களை எழுதி வருகிறார்.

பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த எழுத்தாளர் மூன்று பிள்ளைகளுக்கு தாயுமாவார். முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் தனது இரண்டரை வயது மகனை இழந்துள்ளார். இவரது தந்தை கந்தையர் தாய் நாகம்மா. 1986ஆம் ஆண்டு கிளிநொச்சி யில் நடந்த வன்முறை தாக்குதலில் பெற்றோரை இழந்து செஞ்சோலையில் வளர்ந்தவர்.

ஆரம்பக் கல்வியை கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியிலும், இடைநிலை, உயர்கல்வியை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்தியக் கல்லூரியிலும் கற்றார். யாழ் பல்கலைக்கழக கலைமாணி பட்டதாரி. சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்ற சட்டத்தரணி. வன்னிமகள் எஸ்.கே.சஞ்சிகா அவரது 12 ஆவது வயதிலேயே எழுத்துத்துறைக்குப் பிரவேசித்துள்ளார்.

அரசியல் கட்டுரை, கவிதை, சிறுகதை, புத்தக ஆய்வுரை, அரசியல் விமர்சனம், அறிவிப்பு ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்ட பன்முகத்திறமைகளைக் கொண்டவர். எழுத்தாளர் வன்னிமகள் சுதந்திர ஊடகவியலாளராகவும் பணியாற்றி வருகிறார். போர்க்காலத்திலும் இவரது படைப்புகள் வன்னியின் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

எழுத்தாளர் 1993ஆம் ஆண்டு அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வில் தேசிய மட்டத்தில் தங்கப்பதக்கம் பெற்றுள்ளார். அத்தோடு நெருஞ்சிமுள் என்னும் ஈழத்து திரைப்படத்தில் கதாநாயகியாகவும் நடித்துள்ளார். நெம்பு, வெளிச்சம், சாளரம் சஞ்சிகைகளிலும் ஈழநாதம், சுதந்திரப் பறவை பெண்கள் பத்திரிகையிலும், சுடர்ஒளி, வீரகேசரி, தினக்குரல், எதிரொளி, புதுவிதி ஆகிய சஞ்சிகைகளிலும் இவரின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

தமிழருள் இணையத்தளம், தமிழன் 24 இணையத்தளம், பதிவு இணையத்தளம் போன்ற இணையங்களிலும், புலம்பெயர் பத்திரிகையான கனடாவில் இருந்து வெளியாகும் தாய்வீடு மாதாந்த சஞ்சிகையிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. அத்தோடு நோர்வே தமிழ்முரசம் வானொலி, ஆஸ்திரேலியா தமிழ்ஒளி வானொலி, கனேடிய வானொலியிலும் இவரது கவிதைகள், நேர்காணல்கள் ஒலிபரப்பாகியுள்ளன.

இலங்கைக் கிறிஸ்தவ அங்கிலிக்கன் திருச்சபையால் வெளியிடப்படும் 'தெளிவு' என்னும் அகில கிறிஸ்தவ மாதாந்த பத்திரிகைக்கு ஐந்து வருடங்களாக ஆசிரியராக இருந்து அந்தப்பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

'சுவாசம் மட்டுமே சுடுகலனாய்' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். 'விடுதலைக்கனல்' என்னும் இவரின் முதல் கவிதை நூலின் பிரதி தற்பொழுது கையிருப்பில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது யாழ்மாவட்ட மகளிர் வெளிவிவகாரக்குழுக்களின் செயலராகவும் உள்ளார். இது சண்டிலிப்பாய், கோப்பாய், வேலணை, வடமராட்சி என 15 பிரதேசசபைகளை உள்ளடக்கிய மகளிர் விவகாரக்குழு என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் இறுதிப் போரில் உயிரிழந்த தனது மகனின் ஞாபகர்த்தமாக வறுமைக்குட்பட்ட பிள்ளைகளை உள்வாங்கி அவர்களுக்கு உணவு, சீருடை ஆகியவற்றை கொடுத்து இலவசமாக முன்பள்ளி ஒன்றையும் நடத்தி வருகிறார். இதன் நிர்வாகியாக இவர் உள்ளார். அகில இலங்கை சமாதான நீதவானாகவும் இருக்கிறார்.

இவரின் பன்முகத்திறமையைப் பாராட்டி பூவரசி அறக்கட்டளை இவருக்கு பாலுமகேந்திரா படைப்பூக்க விருதை அளித்து மதிப்புறுத்தியுள்ளது.

# ‘சுகவிழி’ கொணர முயலும் சமூக நடத்தை மாறுதல்கள்;

மருத்துவர் ஜெசிதரன்

தடுப்பு மருத்துவ பூங்காவில் அண்மையில் மலர்ந்த புதுமலர் ‘சுகவிழி’. பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பொதுச் சுகாதார பரிசோதகராக பணியாற்றி வரும் ஆ.ஜென்சன் றொனால்டின் சிந்தனையாலும் நீண்ட முயற்சியினாலும் பெற்றக்கொண்ட விளைச்சலே அது. இம் மலர் நிச்சயமாக வாசகர்களை வசீகரிக்கும். இதன் நறுமணத்தில் திளைப்பதும் திளைக்காதிருப்பதும் வாசகனின் பொறுமையிலும் தடுப்பு மருத்துவத்திலுள்ள ஈடுபாட்டிலுமே தங்கியுள்ளது.

ஆ.ஜென்சன்றொனால்ட் தாம் இதுவரை பத்திரிகைகளில் எழுதி வந்த சுகாதாரம் தொடர்பான பொதுமக்களுக்கான விழிப்பூட்டல் கட்டுரைகளை தொகுத்து வெளியீடு செய்ய முனைந்துள்ளார். அவரின் முயற்சிக்கு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கல்வி வெளியீட்டுப் பிரிவினர் பக்கபலமாக இருந்து வெளியீடு செய்துள்ளனர். அதன் விளைவே எம் கைகளில் தவழும் ‘சுகவிழி’.

இந்நூலாசிரியர் ஆ.ஜென்சன் றொனால்ட் யாழ். பல்கலைக்கழகத்தின் சுகாதார முகாமைத்துவத்தில் விஞ்ஞான முது மாணிப்பட்டம் பெற்றவர். இவர் 1998ஆம் ஆண்டு முதல் தற்போது வரை சுமார் இருபத்தொரு ஆண்டுகளாக கவிதைகள் கட்டுரைகள் விமர்சனங்கள் என எழுத்துத்துறையில் தொடர்ந்து தடம் பதித்து வருகிறார்.

இவரது வெளியீட்டு ரீதியான அடையாளங்களில் இது ஏழாவது வெளியீடாகும். இந்த ‘சுகவிழி’ எனும் நூல் சுகாதார மேம்பாட்டு நோக்கோடு சாமானிய மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் இலகு நடையில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலின் அட்டைப்படம் மிகநேர்த்தியான முறையிலும், கவர்ச்சியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நூலின் வருகை தடுப்பு வைத்தியத்துறைக்கு நிச்சயமாக பலம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நந்தவனக்காற்று, சூரியக்குளியல், சிற்பிகள், அழகு. யாழ்கவி மற்றும் மீட்பின் சுவடுகள் எனும் நூல்களை வெளியீடு செய்து தன் சமூகஞ்சார் அக்கறை, ஏக்கம் என்பவற்றை வெளிப்படுத்திய நூலாசிரியர் ஆ.ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரிய நிலா) ‘சுகவிழி’யில் பல தடுப்பு வைத்திய பக்கங்களைத் தொட்டிருக்கிறார். இந்த நூலாசிரியரின் முயற்சி பெரிதும் பாராட்டப்பட வேண்டியதும் பேசப்படவேண்டியதும் ஆகும். தடுப்பு வைத்தியத் துறைக்கு இவ்வாறான நூல்களின் வரவின் அவசியத்தையும் இது உணர்த்தி நிற்கின்றது.

**சமூக விழிப்புணர்வுக்கு ஏதுவான ஒரு படைப்பு**

சமூக விழிப்புணர்விற்கும், சமூக நடத்தை மாறுதல்களுக்கும் இவ்வாறான வரவு நிச்சயம் பங்காற்றும் என்பது மறுத்தலுக்கில்லை. சமூக மாறுதல்களுக்கான உந்து சக்தியை இது எவ்வாறு வழங்கப்போகின்றது என்பதனை வாசகர்களின் அவதானிப்புக்கு விட்டு விடுவோம்.

தான் கற்றுணர்ந்த, பட்டுணர்ந்த சுகாதார மேம்பாட்டு விடயங்களை மற்றையோரும் படித்து அவர்தம் வாழ்வினை மேம்படுத்தப்பட வேண்டும் என்று நூலாசிரியருக்கு ஏற்பட்ட உந்துதலே ‘சுகவிழி’ எமது கைகளுக்கு கிடைக்க வழி செய்துள்ளது. தன் சிரமம் பாராது எழுதி வெளிவந்தவற்றைச் சேகரித்து தொகுத்து நூலுருவிற்கு ஏற்ப அவற்றின் உள்ளடக்கத்தினை வடிவமைத்து வெற்றிகரமாக வெளியீடு செய்வது என்பது இலகுவான காரியமல்ல என்பது நாம் அறிந்ததே. இந்த நூலில் உள்ள விடயங்கள் யாவும் மிகவும் எளிய நடையில் மருத்துவ அறிவில்லாதோரும் இலகுவில் புரிந்திடும் வகையில் எழுதப்பட்டுள்ளன. இங்கு சொல்லப்பட்டவற்றை கருத்தூன்றிப் படிக்கும் போது வாசகனின் அறிவு நிச்சயமாக விசாலித்து மேன்மையுறும். இது அவரவரது உளப்பாங்கில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தி அவரவரின் நடத்தையில் நேரிய தாக்கத்தினை ஏற்படுத்தினால் இதுதான் இந்த நூலுக்கு கிடைக்கும் வெற்றி.

> உயிர்கொல்லி நோயான டெங்கு, தொற்று நோய்களிலிருந்து விடுதலை பெறுவோம், தடுப்பு மருந்தேற்றலால் கிடைக்கும் நன்மைகள், ஆரோக்கியத்தின் மருந்து பாதுகாப்பான உணவே, பழங்களை பாதுகாப்பான முறையில் பழுக்க வைக்கும் முறைகள், சரியான பொதியிடல் முறைகள் என இன்றைய மக்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை தடுப்பு மருத்துவ அறிவினைத் தர முயற்சித்துள்ளது சுகவிழி.




**உள்ளடக்கம்**

இதன் உள்ளடக்கத்தினை பார்ப்போமேயானால் அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய்கள் மற்றும் சுகாதார விழிப்புணர்வுக்கட்டுரைகள் எனும் இரண்டு பிரிவுகளில் கட்டுரைகள் தொகுப்பப்பட்டுள்ளன. அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய்கள் எனும் பிரிவில் முப்பது வரையான தொற்றுநோய்கள் பற்றிய கட்டுரைகளும், விழிப்புணர்வுக் கட்டுரைகளில் பதினாங்கு வரையான கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒருவருக்கு தொற்று நோய் ஏற்பட்டால் அது ஏனையோருக்கும் பரவி பெரும் இடர் ஏற்படும் முன்பாக அதன் பரம்பலைக் கட்டுப்படுத்தல் வேண்டும். எனவே இந்த நோய்த் தொற்றுத் தொடர்பாக அறிந்திருந்தால் சமூக பொறுப்புள்ள எவரும் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். அதன் மூலமே சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும். அந்த வகையில் எந்தெந்த நோய்கள் குறித்து அறிவித்தல் கொடுக்க வேண்டும் என்பது மிக அழகாக கூறப்படுகிறது. ஒவ்வொரு தொற்று நோய்களையும் நீட்டி முழக்காது இரண்டு பக்கங்களுக்குள் மாணவர்களுக்கும் இலகுவில் புரிந்திடும். வகையில் அடக்கியமை சிறப்பு.

விழிப்புணர்வுக் கட்டுரைகளின் தொகுப்பில், தற்போதைய காலத்திற்கு ஏற்றாற் போல் சாமானியரும் அறிந்திருக்கவேண்டிய பல கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உயிர்கொல்லி நோயான டெங்கு, தொற்று நோய்களிலிருந்து விடுதலை பெறுவோம், தடுப்பு மருந்தேற்றலால் கிடைக்கும் நன்மைகள், ஆரோக்கியத்தின் மருந்து பாதுகாப்பான உணவே, பழங்களை பாதுகாப்பான முறையில் பழுக்க வைக்கும் முறைகள், சரியான பொதியிடல் முறைகள் என இன்றைய மக்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை தடுப்பு மருத்துவ அறிவினைத் தர முயற்சித் துள்ளது சுகவிழி.

இந்தச் சுகாதார மேம்பாட்டு ஏடு பொது நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களில் கட்டாயமாக பேணப்பட வேண்டிய ஒன்றே. இம்மலரினை இலவசமாக பெற்றுக்கொள்ள ஏற்படுத்திய முயற்சியும் பாராட்டாமல் இருக்க முடியாது.

*கட்டுரையாளர் :சுகாதார மருத்துவ அதிகாரி, சங்கானை.*

## தமிழ்த்தாய்

தமிழ்மதி

தமிழ் என்னும் போது
மகிழ்கிறது மனது!
அவள் கொண்ட தனிமை
எவள் கொண்ட மகிமை?

பழைய மொழி இதுவே
இனிய மொழி இதுவே!
கனியமொழி, தேன்மொழி
அனைத்தும் எம் தமிழ்மொழி!

இருபதில் வசந்தம் பெற்ற
எம் சொந்தத் தாயவள்!
இலக்கணத்தில் தழைத்து - எம்
நாவில் நடனமிடுபவள் அவள்!

கம்பன் காலம் தொட்டு
எம்தன் காலம் வரை
தமிழன்னை புகழ் இன்றும்
தழைத்தே நிற்குதம்மா!

தமிழ்த் தாய் நீ என்றும்
சிரஞ்சீவியாய் வாழ
தர்மத்தின் வழிதனிலே
சிரமத்தை கொண்டு உழைப்போமே!




## சமாதான நீதிவானாக பதவியேற்பு



துணுக்காய் ஜூலை 24

துணுக்காய் அனிச்சன்குளம் யோகபுரத்தைச் சேர்ந்த சிற்றம்பலம் சண்முகநாதன் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக பதவியேற்றார். துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நிர்வாக கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வுபெற்று மக்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்கியவரெனவும் சமூகப் பணிகள் கலை இலக்கியம் மற்றும் ஆன்மிகப் பணிகளில் ஈடுபடுவதில் ஆர்வமுள்ளவருமாவார். (ம-9)

## எழுதப்படாத நாடக வரலாறு – 11

தேவநாயகம் தேவானந்

# உயிர் கொடுத்து அம்மா எடுத்ததல்லோ இதை அடுத்தவர்க்கு தாயே கொடுப்பதற்கோ....

1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கையின்படி இலங்கையில் அமைதியை ஏற்படுத்த இந்தியாவினால் அமைதிப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இது இந்திய அமைதிகாக்கும் படை (IPKFIndian Peace Keeping Force) என்று அழைக்கப் பட்டது. இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் 1987இன் பிற்பகுதியில் தமது பணிகளை ஆரம்பித்தது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்தனர். இந்திய அமைதிப் படை இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தளபதி திலீபன் யாழ்ப்பாணம் நல்லூரில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உணவொறுப்பில் ஈடுபட்டு உயிர்துறந்தார். இதுவே விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைகளுக்குமான முரண்பாட்டுக்கான அடிப்படையாகி பின்னர் போருக்கான முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். இதன் பின்னர் விடுதலைப்புலிகளின் தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிருவர் இலங்கை இராணுவத்தால் கைதுசெய்யப்பட அவர்கள் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்கள். இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு நிலையில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைக்கும் இடையில் போர் மூண்டது. பொதுமக்கள் விடுதலைப் புலிகள் என்று பல ஆயிரம் பேர் இறந்து போனார்கள். இந்திய அமைதிப்படையின் ஆயிரத்து 200 பேர் இறந்தார்கள். மார்ச் 31, 1990 அப்போதைய இலங்கை அரச தலைவர் பிரேமதாசவால் இந்திய அமைதிப் படையினர் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.



✪ ✪ ✪ ✪

இந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் இராணுவ நிலைப்பாட்டை மக்களுக்குத் தெரிவிப்பதனை நோக்காகக் கொண்டு புதுவை அன்பனின் 'களத்தில் காத்தான்' நாடகம் தயாரிக்கப்படுகின்றது. இந்திய இராணுவம் வடக்கிலிருந்து ஒவ்வொரு பகுதியாக வெளியேறியபோது அவர்கள் வெளியேறிய இடங்களில் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டது.
ஏலவே யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட பாரம்பரியமான சிந்துநடைக் கூத்து வடிவத்தில் இந்திய அமைதிப்படை



யின் காலகட்டத்தை கருப்பொருளாக்கிய இந்தக் கூத்துரவ நாடகம் தயாரிக்கப்படுகின்றது. “இந்திய அரசு ஈழத்துக்கு வந்தது ஒரு இரகசியத் திட்டத்தோடுதான். அதாவது ஈழப்போராட்டத்தை நசுக்குவதற்கான பாரிய திட்டத்துடன் தான் வந்தார்கள். அதனால் தான் புலிகள் அவர்களோடு போராடவேண்டிய நிலைவந்தது.” என்று நாடகத்தின் உட்பொருளை விளக்குகிறார் அதன் ஆசிரியரும் நெறியாளருமான புதுவை அன்பன்.
வன்னிப் பிரதேசததில் இளைஞர்களுக்குப் பழக்கப்பட்ட இந்த நாடகம் 600 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது. பின்னர் இதே நாடகத்தை விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பழகி அவர்களும் இந்தநாடகத்தை 500 தடவைகளுக்குமேல் மேடையேற்றியதாக அறிய முடிகிறது. இந்திய இராணுவம் வெளியேறி வருகின்ற சூழலில் மக்கள் மத்தியில் இந்தநாடகம் பெருவரவேற்பைப் பெற்றிருந்தது. இந்த நாடக ஆற்றுகை ஓர் அரசியல் அறிவூட்டல் பணியை நாடகம் மூலமாக மேற்கொள்ள முடியும் என்பதற்கு சிறந்த உதாரணமாகும்.

✪ ✪ ✪ ✪

நீதிதேவதை, தமிழ் அன்னை, மக்களைக் காக்கும் போராளிகள், இந்திய அமைதிப்படை மற்றும் அவர்களோடு இணைந்து செயற்பட்ட ஆயுதக் குழு என்ற பாத்திரங்களை கொண்டு களத்தின் காத்தான் நாடகம் பிரதானமாகப் பின்னப்பட் டுள்ளது. இந்தப் பாத்திரங்களுக்கு இடையிலான முரண்களால் நாடகம் வளர்த்துச் செல்லப்படுகின்றது. இலகுவான பாடல் அமைப்புக்கள் அவற்றினூடான உணர்ச்சிப் பரிமாறல்கள் எள்ளல், நகைச்சுவை என்று இந்தநாடகம் மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றிருந்தது. இதில் நீதிதேவி இந்தியப் படையின் வருகையை தமிழ்தாய்க்கு பாடலாக அறிவிக்கிறார்.

பாரத தேவியல்லோ–அம்மாவே பெரும்
படையொடு வரப்போகுதம்மா
இந்திய தேசமல்லோ–அம்மாவே எம்மை
இரை எடுக்க வரப்போகுதம்மா

தமிழ் தாய் போராளிகளை அமைதி காக்குமாறும் நீதிக்குக் கட்டுப்பட்டு இருக்குமாறு அமைதிப்படுத்துவதும். காத்தான பொறுமையிழந்து போராடப் போவதாகக் கூறுவதுமான முரணை நாடகத்தில் செயலியக்கமாக ஆசிரியர் முன்வைக்கிறார். முதலில் போராளிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டுமென்று தமிழ்தாய் கட்டளையிடுகிறாள். அதற்கு போராளிகள்.

உயிர் கொடுத்து அம்மா எடுத்ததல்லோ இதை
அடுத்தவர்க்கு தாயே கொடுப்பதற்கோ
மாவீரரின் மான ஜீவனம்மா – இதை
மாற்றாருக்கு ஈர்ந்தால் பாவமம்மா

என்று தாய்க்கும் மகனுக்குமான விவாதமாகத் தொடர்கிறது. திலீபன் உணவொறுப்பில் ஈடுபட்டு இறந்துபோகிறான். அதனால் காத்தான் ஆத்திரமடைந்து தமிழ் தாயிடம் தான் போராடப் போவதாக வேண்டுகிறாள். அதற்குதாய் மறுக்கிறாள்

காத்தான்: போக விடை தாயாரே தாவனம்மா
பாரதப் படையுடனே மகனார் போரிடவே
தமிழ் தாய் : வேண்டாமடா மகனே வேண்டாமடா
இந்த வேளையிலே போர் உனக்கு வேண்டாமடா
காத்தான்: ஏகவிடை அம்மாவே தாவேனனை
அந்த எத்தர்களை மகனார் தானழிக்க

தாய்க்கும் மகனுக்குமான இந்த விவாதம் நீண்டு செல்லவே, அவர்களுக்கிடையில் நீதிதேவதை குறிக்கிட்டு,

நீதி தேவதை :
பொறுத்திடடா மகனே பொறுத்திடடா
நீயும் போர்புரிய இது நல்லகாலமில்லை
என்று இந்த இலகுநடைக் கூத்துருவநாடகம் நீள்கிறது.

(தொடரும்)

வன்னிப் பிரதேசததில் இளைஞர்களுக்குப் பழக்கப்பட்ட இந்த நாடகம் 600 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது. பின்னர் இதே நாடகத்தை விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் பழகி அவர்களும் இந்தநாடகத்தை 500 தடவைகளுக்குமேல் மேடையேற்றிய தாக அறிய முடிகிறது.



# கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் 36 பேர் கடலில் வளைத்துப் பிடிப்பு

## பருத்தித்துறையில் நேற்று சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

வடமராட்சி, பருத்தித்துறைக் கடற்பரப்பில் சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தனர் என்று தெரிவித்து வெளிமாவட்ட மீனவர்கள் 26 பேர் பருத்தித்துறை முனை மீனவர்களால் வளைத்துப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நீண்டகாலமாகச் சட்டவிரோதமாகக் கடலட்டை பிடிக்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது என்றும், இது தொடர்பாக உரிய தரப்புக்களுக்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்றும் மீனவர்கள் கூறுகின்றனர். அதையடுத்து நேற்று மதியம் பருத்தித்துறை முனைக் கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த மீனவர்கள், சட்டவிரோதமாக கடலட்டை பிடித்தவர்களை வளைத்துப் பிடித்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

12 படகுகளில் வந்த 36 பேர் வளைத்துப் பிடிக்கப்பட்டனர் என்றும், அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர். பொலிஸார் அவர்களைக் கடுமையாக எச்சரித்து நேற்று மாலை விடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக சட்டவிரோதமாகக் கடலட்டைப் பிடிக்கும் செயற்பாடுகள் நடைபெற்றால், கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என்றும் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-26,173)

# ஏ/எல் அனுமதி பத்திரங்களை இணையத்தளத்தில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

2019ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் தனியார் பரீட்சார்த்திகள் இன்று புதன் கிழமை முதல் இணைய தளத்தின் ஊடாக அனுமதி பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த நாள்களில் தபால் ஊழியர்களால் முன்னெடுக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அனுமதி அட்டைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் இந்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றுபரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித குறிப்பிட்டுள்ளார்.

www.doenets.lk என்ற இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து பரீட்சார்த்திகள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைப் பதிவு செய்து பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(எ-7)

நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

எமது இளைஞர்களைப் பலியெடுக்கும் அவசரகாலச் சட்டத்துக்கு எதிராகவே நாம் நாடாளுமன்றில் செயற்படுவோம். இந்தச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கவில்லை. அவ்வாறான சட்டம் நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட போது நான் அது தொடர்பில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட முற்பட்டேன். ஆனாலும் சபாநாயகர் அதை ஏற்கவில்லை. அதன் விளைவுகளை இன்று நாம் எதிர்கொள்கின்றோம். அவ்வாறான சட்டம் நீடிப்புக்காக கொண்டுவரப்படும்போது அதற்கு எதிராக செயற்படுவாம்.

ஆவா குழு உள்ளிட்டவை அரச படைகளின் ஒத்துழைப்புடனேயே செயற்படுகின்றன. ஒருவர் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றார் என்று தெரிந்துகொண்டால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தலாம். அதைவிட்டு அவர்களைச் சுட்டுக் கொல்வதற்கு யாருக்கம் அதிகாரம் இல்லை என்பது எனது கருத்து. இது போன்ற சம்பவம் தென்னிலங்கையில் இடம்பெற்றிருக்குமானால் நிலமை வேறு என்றார்.

(த-6)

## அமைச்சரவைப்...

நேற்றுக்கொழும்புமகசின்சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதியை நேரில் சந்தித்து கலந்துரையாடிப் போராட்டத்தை முடித்து வைத்ததுடன், அரசியல் கைதிகளின் விடுதலை'தொடர்பாக எதிர்வரும் இரண்டு வாரங்களில் அமைச்சரவை பத்திரத்தை தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோதே அரச தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

அவர் தெரிவித்துள்ளதாவது

ஒரு சில அரசியல் கைதிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டு அவர்கள் தாக்கல் செய்த மேன்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் அரச தலைவருக்கு மட்டுமே இருக்கின்றது.

அதேவேளை வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பதெனில் அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுத்து அதிலும் நிர்வாகத் துறை, நீதித்துறை, நிறைவேற்றுத் துறையின் பங்களிப்பு இதில் மிக அவசியமானது. அதில் ஒரு துறையின் முடிவால் மட்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யமுடியாது.

அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரின் மூலம் அரசியல் தீர்மானத்தை எடுத்து அதன் பின்னர் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கள் மீள பெற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே அவர்கள் விடுதலை செய்யப்பட முடியும்.

அமைச்சரவை தீர்மானத்தால் மட்டும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என்பதே சட்டரீதியான நிலைப்பாடாக இருக்கின்றது- என்றார்.

(எ)

## மானிப்பாய்...

உந்துருளிகளில் வந்த 6 பேர் கொண்ட வாள் வெட்டுக் கும்பலை சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்தனர். எனினும் அவர்கள் தப்பித்த வேளை பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றது. கொடிகாமம் கச்சாயைச் சேர்ந்த செல்வரத்தினம் கவிகஜன் (வயது 23) என்ற இளைஞ்னே இவ்வாறு உயிரிழந்தார். இவர் ஆவா குழுவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கும் பொலிஸார் சம்பவ இடத்திலிருந்து வாள்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் மானிப்பாயில் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளில் தாக்குதல் நடத்துவதற்கு வந்த கும்பலுக்கு பாதை காண்பிப்பதற்கு வந்தனர் என்ற குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சிறப்புப் பொலிஸ் பிரிவினரே இவ்வாறு இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம், நாவந்துறை அராலி வீதி வசந்தபுரத்தைச் சேர்ந்த இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இளைஞனை உந்துருளியில் ஏற்றி வந்தபோது, சூடு இடம்பெற்றதும் உந்துருளியைக் கைவிட்டுத் தப்பிச் சென்ற இளைஞனின் பணப்பையை (பேர்ஸ்) சம்பவ இடத்தில் பொலிஸார் மீட்டிருந்தனர்.

மானிப்பாய் சுதுமலை தெற்கு ஐங்கரன் வீதியைச் சேர்ந்த சிவசுந்தரராஜா சானுசன் (வயது 18) என்ற இளைஞனே இவ்வாறு தனது பணப்பையைத் தவறவிட்டுச் சென்றார். அவரது அடையாள அட்டையை வைத்து சந்தேகநபரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்த நிலையில் சந்தேகநபர் மூத்த சட்டத்தரணி மூலம் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை முற்பட்டார்.

அவரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். எனினும் ஏனைய சந்தேகநபர்கள் நால்வர் தொடர்பிலும் எந்தத் தகவலையும் சானுசன் தெரிவிக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னலையில் நேற்று மாலை முற்படுத்தினர். மேலும் சந்தேகநபர்களைக் கைது செய்ய வேண்டியுள்ளது என்று பொலிஸார் மன்றுரைத்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேகநபர்கள் மூவரையும் வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(எ-37,26)

## தமிழ்...

ஆகையால் பாரதி சொன்னது போல் ஏனைய மொழியை படியுங்கள், ஆனால் தமிழை தாயாக கொண்டிருங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு அமைய நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் பாடசாலை மாணவர்களுக்குப் பால் வழங்கும் "தேசிய பால் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்" ஆரம்ப நிகழ்வு நேற்று ஆளுநர் தலைமையில் யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இந்தத் திட்டம் சுமார் 4 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இடம்பெறுகின்றது. வடக்கு மாகாணத்தில் 5 பாடசாலைகளில் உத்தியோகபூர்வமாக இந்தத் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படுகின்றது. ஆரம்பக் கல்விப் பிள்ளைகளின் போசணை நிலையை உயர்த்தவும், பிள்ளைகள் போசாக்குடனும், நலமுடனும், வளமுடனும் வாழ வேண்டும் என்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். என்றார்

.(எ-7)

## வேட்பாளர்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் செல்வாக்கை அதிகம் கொண்டுள்ளவராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயிர் நாடியாகவும் நான் இருக்கின்றேன். '2018 ஒக்டோபர் 26' அரசியல் சதிப் புரட்சியை முறியடித்து எமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் தலைமை அமைச்சர் கதிரையில் அமர்த்திய நடவடிக்கையில் எனது முழுமையான பங்கு இருந்தது. இதைத் தலைமை அமைச்சர் என்றுமே மறக்கமாட்டார்.

அரசியல் சதிப் புரட்சியின்போது ராஜபக்ச அணியினர் பல கோடி ரூபாவுக்கு என்னைப் பேரம் பேசி தமது பக்கம் இழுக்க முயன்றனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியில் நான் கொண்டுள்ள உயிர்ப்பற்று காரணமாக நீதியின் வழியில் நடந்தேன். கட்சிக்குத் துரோகமிழைக்காமல் தடம்புரளாமல் நின்றேன்.

இந்தநிலையில், அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்க எனக்குத் தகுதி இல்லை என்று சிலர் கொக்கரிக்கின்றனர். பொறாமை பிடித்தவர்கள்தான் இப்படி என்னை விமர்சிக்கின்றார்கள். இந்த விமர்சனங்களைக் குப்பையில் தூக்கி வீசுங்கள்.

நான் முன்னாள் அரச தலைவர் ரணசிங்க பிரேமதாஸவின் மகன். அரச தலைவர் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்க சகல தகுதியும் எனக்கு உள்ளது. தந்தையின் வழியில் பயணிப்பேன். ஏழை மக்களின் கண்ணீரைத் துடைப்பேன். மூவின மக்களையும் அரவணைத்து நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பேன் என்றார்.

(எ-22)

## அவசரகாலச்...

யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஊடக சந்திப்பு கிளிநொச்சியில் அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட இளைஞன் தொடர்பில் பொலிஸார் எவரும் கைது செய்யப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகால சட்டம் ஆகியன நடைமுறையில் உள்ள

## யாழில்...

போம் என்று தெரிவித்தார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர.

இது தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

யாழ்ப்பாணம் மானிப்பாயில் கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த இளைஞர் வாள் வெட்டுக் குழுவான ஆவாக் குழுவின் உறுப்பினராவார்.

இவர் வீடொன்றில் தாக்குதலை மேற்கொள்வதற்காக தனது சகாக்களுடன் வாள்கள் மற்றும் கூரான ஆயுதங்களுடன் உந்துருளியில் வந்தார். இவர்களைப் பொலிஸார் சோதனைக்காக மறித்தபோது இந்த இளைஞரும் ஏனையவர்களும் தப்பியோடினார்கள். அதையடுத்தே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதன்போது துப்பாக்கிச் சன்னம் பட்டு குறித்த இளைஞர் உயிரிழந்தார்.

இவரும், இவருடன் மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்களும் பெரும் குற்றவாளிகள் எனப் பொலிஸ் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. தப்பியோடியவர்களில் மூவர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேவேளை உயிரிழந்த இளைஞரின் ஏனைய சகாக்கள் 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆவாக் குழுவினரின் அடாவடிகள் இன்னமும் அடங்கவில்லை. அவர்களைக் கூண்டோடு இல்லாதொழிப்போம். அப்போதுதான் பதற்றம் இல்லாத நிலைமை அங்கு உருவாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆவாக் குழுவில் உள்ளவர்கள் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அல்லர். அங்குள்ள இளைஞர்களே ஈவிரக்கமற்ற அடாவடிகளில் ஈடுபடுகின்றனர். பெற்றோர் தமது பிள்ளைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும்என்றார்.

(எ-22)

## கறுப்பு...

கழகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. பல்கலை வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணியளவில் மாணவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

படுகொலையானவர்களின் ஆத்மா சாந்தியடைய இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு படுகொலையானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

(எ-37)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 24
யாழ்.கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று புதன் கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்றவுள்ளது.
பிற்பகல் 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவற்குழி அன்னை அணியை எதிர்த்து மயில்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (23)



31ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணி தங்கப்பதக்கத்தை சுவீகரித்தது. (23)

கரம் போட்டியில்

## றொசான், தனறூப்ன் இணை வெண்கலப் பதக்கம் வென்றது



31ஆவது விளையாட்டு விழாவின் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான தேசிய மட்ட கரம் போட்டியில் வவுனியா மாவட்டத்தை பிரதி நிதித்துப்படுத்தி பங்குபற்றிய றொசான், தனறூபன் இணை வெண்கலப் பதக்கம் வென்றனர்.
கொழும்பு கரம் சம்மேளன உள்ளகரங்கில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான கரம் போட்டியில் இரட்டையர் ஆட்டத்தில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வவுனியா மாவட்டத்தை பிரதிநிதித்துப் படுத்தி பங்குபற்றிய றொசான், தனறுபன் இணை தன்னை எதிர்த்து விளையாடிய கம்பகா மாவட்டத்தை பிரதிநிதித்துப்படுத்தி பங்குபற்றிய விளையாடிய வீரர்களை வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தை தட்டிச் சென்றனர். (23)



### ஆர்னோல்ட் சிங்கப்பூர் பயணம்

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள ஆசிய பிராந்திய கால்பந்தாட்ட முகாமில் பங்கெடுப்பதற்காக இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 16 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணியின் தலைவர் அ. ஆர்னோல்ட் நேற்று முன்தினம் சிங்கப்பூர் பயணமானார். (23)

# குத்துச் சண்டைப் போட்டியில் முல்லை. மாவட்டம் சம்பியன்

யாழ்ப்பாணம்.ஜூலை 24
வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட அணி இருபிரிவிலும் கிண்ணம் வென்றது.
ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டம் 3 தங்கம்,4 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 9 பதக்கங்களையும், கிளிநொச்சி மாவட்டம் 3 தங்கம், 2 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 5 பதக்கங்களையும், வவுனியா மாவட்டம் 2 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்கள் உட்பட 5 பதக்கங்களையும்,யாழ்ப்பாண மாவட்டம் ஓர் தங்கப்பதக்கத்தையும், மன்னார் மாவட்டம் ஓர் தங்கம், 2 வெள்ளி, ஓர் வெண்கலப்பதக்கம் உட்பட 4 பதக்கங்களையும்,பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டம் 2 தங்கம்,3 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்கள் உட்பட 7 பதக்கங்களையும், வவுனியா, மன்னார் மாவட்டம் ஓர் தங்கம்,ஓர் வெள்ளிப்பதக்கத்தையும்,கிளிநொச்சி மாவட்டம் ஓர் தங்கப்பதக்கத்தையும்பெற்றுள்ளனர்.(23.ரி3)



### கொக்குவில் இந்துவில் சதுரங்கப் போட்டி

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்

இலங்கை சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் 20 வயதின் கீழ் தேசிய இளைஞர்களுக்கான சதுரங்கப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் தொடர்ந்து நடைபெறும்.
ஆண், பெண் இருபாலருக்குமான போட்டிகள் தனித்தனியாக நடைபெறும். மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு சமூகமளிக்க வேண்டும். போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் தமக்குரிய சதுரங்க விளையாட்டு உபகரணங்களை எடுத்து வருமாறு போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

### அப்றோனுக்கு வெண்கலம்

31ஆவது விளையாட்டு விழாவின் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான தேசிய மட்ட கரம் போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி பங்குபற்றிய எ.ஜே. அப்றோனின் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.
கொழும்பு கரம் சம்மேளன உள்ளகரங்கில் இடம் பெற்ற ஆண்களுக்கான கரம் போட்டியில் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை பிரதிநிதித்துப் படுத்தி பங்குபற்றிய எ.ஜே. அப்றோனின் தன்னை எதிர்த்து விளையாடிய குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துப்படுத்தி பங்குபற்றிய விளையாடிய வீரரை வெற்றி கொண்டு வெண்கலப் பதக்கத்தை தட்டிச் சென்றார். (23)



கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில்

# ஆவரங்கால் மத்தி வி.க. அணி கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஜூலை 24
அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் திருக்குமரன் லஜிதன் ஞாபகார்த்தமான வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.
கடந்த சனிக்கிழமை கழக மைதானத்தில் மின் ஒளியில் இரவு 7:30 மணிக்கு இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்க ழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.
இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக சுஜீவனும், தொடர் ஆட்ட நாயகனாக சிந்துஜனும் தெரிவு செய்யப்பட்டனர்.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அளவெட்டி அ.மி.த.க பாடசாலை அதிபர் ஜெயசுதன் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் சி.சிவபாலன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் அனிஸ்ரன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பொ.ஆதவன் மற்றும் மதிப்புறு விருந்தினராக எ.ஆர். நிறுவனத்தின் உரிமையாளர் அ.நிக்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (23)



# டோனி தெளிவான முடிவெடுப்பார்

## அசாருதீன் நம்பிக்கை

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி அரையிறுதியோடு வெளியேறியது. இந்தப் போட்டியின் முடிவோடு அந்த அணியின் அனுபவ வீரரான டோனி கடுமையாக விமர்சனத்துக்கு ஆளானார். குறிப்பாக, அவரது ஓய்வு குறித்து பலரும் பேசி வருகின்றனர்.

இதற்கு டோனியிடம் இருந்து எவ்வித பதிலும் இன்னும் வெளியாகவில்லை. கிரிக்கெட்டின் முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் என அனைவரும் தங்கள் கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இது குறித்து இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் அசாருதீன் தெரிவிக்கையில்:

ஒரு வீரர் விளையாட விரும்பினால், அவர் எப்படி விளையாடுவார்? என்ன நடக்கும்? என்பதை தேர்வுக் குழுதான் தெளிவாக தெரிவிக்க வேண்டும். சிறந்த வீரர் என்றால், அவர்களும் தங்கள் கருத்தை தன்னம்பிக்கையுடன் கூற வேண்டும்.




ஏதேனும் ஒரு முடிவு வெளியாகித்தான் ஆக வேண்டும். இல்லை என்றால், டோனி ஓய்வு எடுப்பார், எடுக்கமாட்டார் என மாறி மாறி மக்கள் பேசத்தான் செய்வார்கள். ஏனென்றால், டோனியிடம் இருந்து இதற்கெல்லாம் எந்தப் பதிலும் இன்னும் வரவில்லை.

முழு உடல் தகுதி, துடுப்பாட்டத் திறமை மாறாமல் அப்படியே இருந்தால் அவர் தொடர்ந்து விளையாடவே விரும்புவார்.

ஆனால், நான் ஒரே ஒரு கோரிக்கையை மட்டுமே டோனிக்கு விடுக்கிறேன். நீங்கள் விளையாடும் போதெல்லாம் ஆக்ரோஷத்துடன் விளையாட வேண்டும். வயதானால் சில சமயங்களில் ஆட்டம் மந்தமாக இருக்கும். உங்கள் ஆட்டம் அப்படி இல்லை.

உங்கள் இயல்பான ஆட்டத்தால் நிறைய போட்டிகளில் இந்திய அணி வென்றுள்ளது. அப்படியே விளையாடினால் அணிக்கு சிறப்பாக அமையும். அவர் 2 மாதங்கள் ஓய்வெடுத்துவிட்டு அதற்கு பின்னர் தெளிவான முடிவெடுப்பார் என நினைக்கிறேன் - என்றார்.




# கரேத் பேலேவுக்கு வாரத்துக்கு மூன்றரை லட்சம் யூரோ சம்பளம்

## சீன கால்பந்தாட்ட கழகம் அறிவிப்பு

வேல்ஸ் நாட்டின் முன்னணி கால்பந்து வீரரான கரேத் பேலே கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

கிறிஸ்டியானோ ரொனால்டோ ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடிய காலத்தில் இவருக்கு மிகப்பெரிய அளவில் வாய்ப்பு கிடைக்கவில்லை.

கிறிஸ்டியானோ ரொனால்டோ வெளியேறிய பின்னர், கரேத் பேலே அந்த அணியின் முன்னணி வீரராக திகழ்ந்தார். இருந்தாலும் கடந்த பருவ காலத்தில் ரியல் மட்ரிட்டின் செயற்பாடு மிகவும் மோசமாக இருந்தது. இதனால் ஷிடேனை மீண்டும் பயிற்சியாளராக நியமித்தது ரியல் மட்ரிட்.

பேயர்ன் முனிச் அணிக்கெதிரான ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி தோல்வியைத் தழுவியது.

இந்தப் போட்டிக்குப்பின் ரியல் மட்ரிட் கரேத் பேலேவை வெளியேற்றும் வேலையில் ஈடுபட்டு வந்தது என்று ஷிடேன் தெரிவித்திருந்தார்.

இதற்கு "சிறந்த வீரரான கரேத் பேலேவை ஷிடேன் அவமதித்து விட்டார்" என்று பேலேவின் முகவர் தெரிவித்தார். இந்த நிலையில் சீனாவைச் சேர்ந்த ஷென்குவா கால்பந்து கழகம் கரேத் பேலேவுக்கு வாரம் மூன்றரை லட்சம் யூரோ சம்பளமாக கொடுக்க தயராக இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளது.

ரியல் மட்ரிட் உடனான கரேத் பேலேயின் ஒப்பந்தம் 2022ஆம் ஆண்டு வரை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அவர் சீன கழகத்துக்கு செல்வாரா என்பது சந்தேகமே.

# பாகிஸ்தான் கிரிக்கெட் அணி சீரமைக்கப்படும்

## அமெரிக்காவில் இம்ரான்கான் தெரிவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை உலகின் சிறந்த அணியாக மாற்றுவதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருவதாக அமெரிக்க சென்றுள்ள பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான் கான் அங்கு வாழ்கின்ற பாகிஸ்தான் மக்களுக்கு உறுதி அளித்தார்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் லீக் சுற்றோடு வெளியேறியது. இது அந்நாட்டு கிரிக்கெட் ரசிகர்களுக்கும், வெளிநாட்டில் வாழும் பாகிஸ்தான் ரசிகர்களுக்கும் வேதனை அளித்தது.



இது குறித்து இம்ரான்கான் தெரிவிக்கையில்; அடுத்த தொடரில் உலகின் தலைசிறந்த அணியாக பாகிஸ்தான் அணியை முன்னேற்றும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த வீரர்கள் அணிகளில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். இந்த வார்த்தையை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்- என்றார்.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி இம்ரான் கான் தலைமையில் கிண்ணம் வென்றது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் குடும்பத்தின் ஆசையை நிறைவேற்றிய இயன் மோர்கன்



உலகக் கிண்ணத்தை வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் இயன்மோர்கன் இங்கிலாந்தில் உள்ள ஆப்கானிஸ்தான் குடும்பமொன்றின் அழைப்பை ஏற்று அவர்களுடன் கிரிக்கெட் விளையாடியதற்கு சமூக ஊடகங்களில் பலத்த வரவேற்பு வெளியாகியுள்ளது.

ஆப்கான் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடன் கிரிக்கெட் விளையாடுமாறு கேட்டனர் என்றும் அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு உடனடியாக அவர்களுடன் கிரிக்கெட் விளையாடியதாகவும் மோர்கன் குறிப்பிட்டார்.

ஆப்கான் குடும்பத்தவர்களுடன் எடுத்துக்கொண்ட ஒளிப்படத்தையும் அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார்.

ஆப்கானிஸ்தான் அணியின் புதிய தலைவர் ரசிட் கான் இதனை பாராட்டியுள்ளதுடன் மோர்கனை ஜாம்பவான் என்றும் வர்ணித்துள்ளார்.




பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தப் போட்டி நாளை மறுதினம் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

## இந்தியாவுக்கு எதிரான போட்டியில்

# சுனில் நரைன், பொல்லார்ட் ரி–20 அணியில் இணைப்பு

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இரு அணிகளும் மோதும் முதல் ரி- 20 ஆட்டம் எதிர்வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்த தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் முதல் இரண்டு ரி-20 போட்டிக்கான வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர்.

பொல்லார்ட், சுனில் நரைன் ஆகியோர் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் மீண்டும் இடம் பெற்று உள்ளனர். சுழற்பந்து வீரரான சுனில் நரைன் ரி-20 பன்னாட்டு போட்டியில் விளையாடி கிட்டத்தட்ட 2 வருடங்கள் ஆகிறது.

ரி-20 உலகக் கிண்ணப் போட்டியை கருத்திற் கொண்டு பொல்லார்ட், சுனில் நரைனுக்கு அணியில் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டு




உள்ளதாக தேர்வு குழுவின் இடைக்காலத் தலைவர் தெரிவித்தார்.

சகலதுறை ஆட்டக்காரர் ரஸல் அணியில் இடம் பெற்றுள்ளார். ஆனால் அவர் உடல் தகுதியை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான முதல் இரண்டு ரி-20 போட்டிக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்களின் விவரம்:

கார்லோஸ் பிரித்வைட் (அணித் தலைவர்), ஜான் கேம்ப்பெல், எவின் லிவிஸ், ஹெட்மையர், பொல்லார்ட், நிக்கோலஸ் பூரன், பொவேல், அந்த்ரே ரஸல், காட்ரெல், கீமோ பால், சுனில் நரைன், அந்தோணி பிராம்ளே, கேரி பியாரே, ஒஷானே தாமஸ்.




லண்டனில் இடம்பெற்ற விம்பிள்டன் தொடரில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ருமேனிய நாட்டு வீராங்கனை சிமோனா ஹெலப் வெற்றி பெற்று முதன்முதலாக கிண்ணத்தை சுவீகரித்து தனது நாட்டு திரும்பிய போது, பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் கூடி அவரை காண திரண்டிருந்தனர்.

**நியத்த ஜய** நியத ஜய
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 790 · சீட்டிழுப்பு திகதி 23.07.2019
வெற்றி இலக்கங்கள் 05 09 36 48 O
அடுத்த வெள்ளிக் கிழமைக்கான ஜக்பொட் ரூ. 28, 972, 600/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி** அதிர்ஷ்டம்
திகதி 23.07.2019 · வெற்றி வாரம் 2566 · வர்ணம் சிவப்பு
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 16 24 33 40
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 23,79,884/=
24.07.2019ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 678
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.07.23
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,588,440/-
வெற்றி இலக்கங்கள் 19 20 43 65 A
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1010
சீட்டிழுப்பு திகதி 2019.07.22 திங்கட்கிழமை
L 14 18 47 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,577,688/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
[illegible]
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உலகக் கிண்ண சர்ச்சை

# புள்ளிகள், ஓட்ட சராசரி அடிப்படையில் வெற்றியை தீர்மானித்திருக்கலாம்

## இயன் சப்பல் ஆலோசனை

நடைபெற்று முடிவடைந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டி பல்வேறு சர்ச்சைகளின் மத்தியில் முடிவுற்று, இங்கிலாந்து வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இதன் மீதான சர்ச்சைகள் இன்னும் ஓய்ந்த பாடில்லை. நடுவர் தர்மசேன 6 ஓட்டங்கள் த்ரோ விவகாரத்தில் தான் தவறிழைத்ததாகக் கூறினார்.

பலரும் தங்கள் கண்டனங்களையும் கருத்துகளையும் தெரிவித்து வருகையில், புற்று நோயில் இருந்து மீண்ட முன்னாள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் மேதை இயன் சப்பல் தெரிவித்ததாவது;



உலகக் கிண்ண இறுதிப் போட்டி சமநிலையில் முடிவடையும் போது இறுதியில் போட்டியிட்ட இரு அணிகள் லீக் சுற்றுப் போட்டி முடிவுகளில் அட்டவணையில் எந்த நிலையில் இருந்தது என்று பார்த்து அந்தப் பட்டியலில் இந்த இரு அணிகளில் மேலே இருந்த அணிக்கு கிண்ணத்தை வழங்குவதுதான் குறைந்த சர்ச்சைக்குரிய முடிவாகும்.

அதாவது இறுதிக்குத் தகுதி பெற்ற இரு அணிகள் லீக் சுற்று முடிவில் புள்ளிகள் அடிப்படையிலோ அல்லது அதிலும் சமமாக இருந்தால் நிகர ஓட்ட சத விகிதத்தில் அதிகமாக இருந்த அணியையே கிண்ணத்தை வென்றதாக தெரிவு செய்வதே சிறந்தது. இதில் சர்ச்சைக்கு வாய்ப்பிருந்தாலும் குறைந்த அளவனா சர்ச்சையே ஏற்படும்.

சுப்பர் பந்துப்பரிமாற்றம் வெற்றியாளரைத் தீர்மானிக்கவில்லையெனில் இதுதான் சிறந்த முடிவு. இந்த முறையைக் கையாண்டிருந்தாலும் இங்கிலாந்துதான் வெற்றி பெற்றிருக்கும். மேலும் லீக் சுற்றில் நியூஸிலாந்தை இங்கிலாந்து எளிதாக வீழ்த்தியதும் குறிப்பிடத்தக்கது - என்றார்.

**வேலையாள்கள் தேவை**
யாழ். நகரை அண்மித்த யூஸ் கடைக்கு (Juice Bar) அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.
077 644 5529, 077 188 6719

**வேலையாள்கள் தேவை**
கொழும்பு - யாழ் A/C Bus இல் உதவியாளராக பணிபுரிய ஆள் தேவை.
தொடர்புகளுக்கு
077 766 7715

LAUGFS GAS பெருமதி வாய்ந்த சலுகைகளோடு
25% Cash Back
மேலதிக விபரங்களுக்கு
011 4 427 427
LAUGFS GAS




**A/L- வரலாறு-2019**
மாபெரும் கருத்தரங்கு
இடம் - D.M.I கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம்.
காலம் - 27.07.2019 (சனிக்கிழமை)
28.07.2019 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் - 7.30 a.m - 2.30 p.m
வளவாளர்கள் -M.பத்மன் M.A (History)
-S.சுஜிகரன் B.A (History)
100% எதிர்பார்க்கை வினாக்கள், விடைகளுடன்.

**British college of higher studies**
IELTS (Academic/General)
IELTS Life skills (A1, B1 exams)
Diploma in English
Spoken English
Spoken Sinhala
Canadian student visa
15, Stanley Road,
Sirambiyady lane, Jaffna.
(லங்கா சதொச மேல் மாடி)
021222 4550/076 1380212

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24 .07.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.